Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 19 திங்கட்கிழமை (04.08.2014) பக்கங்கள் 20 ஓசை - 307

## ஆலய நடைமுறைகளை மீறி நல்லூரில் வழிபட்டார் மேர்வின்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டு நேற்றைய தினம் நல்லூர்க் கந்தனை தரிசிக்கச் சென்ற மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வாவின் வாகனம் ஆலயத்தின் உட்பகுதி வரை செல்ல அனுமதிக்கப்பட்ட துடன், அமைச்சரும், அவரது மெய்ப்பாதுகாவலர்களும் ஆலய வாயில் வரை பாதணிகளுடன் சென்று அவற்றைக் கழற்றாது வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

(19) பக்கம் பார்க்க...



## மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத செயல்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆலய நடைமுறைகளை மீறி நல்லூரில் அமைச்சர் மேர்வின் சில்வா வழிபாட்டில் ஈடுபட்டமையானது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத செயலென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு தனிப்பட்ட பயணமாக வருகை தந்த அமைச்சர் மேர்வின் சில்வா, நல்லூருக்குச் சென்று ஆலய நடைமுறைகளை மீறிய வகையில் தமது மெய்ப்பாதுகாவலர்களுடனும், வாகனங்களுடன் ஆலய முன்பகுதி வரை சென்றதுடன், சப்பாத்துக்களுடனும் வழிபாட்டில் ஈடுபட்டார். இவரின் இந்தச் செயற்பாடு இந்துக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும்

(19) பக்கம் பார்க்க...

# சர்வதேச நிபுணர்குழு உறுப்பினர்களை போட்டி நிலைக்குள் தள்ளக்கூடாது

### அரசுக்கு கூறுகிறார் ஜயந்த தனபால



(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர் குழுவை போட்டி நிலைக்குத் தள்ளிவிடக்கூடாதென ஜெனிவாவிற்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச விசாரணைக் குழுவுடன் மோதுவதற்காகவே தாங்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறோம் எனத் தெரிந்தால் காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட மூன்று வெளிநாட்டு நிபுணர்களும் அதிலிருந்து விலகிவிடுவார்கள்.

இது அழகுராணிப் போட்டி அல்ல. சர்வதேச விசாரணைக் குழுவுடன் மோதுவதற்காகவே தாங்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறோம் எனத் தெரிந்தால் அந்த மூவரும் விலகி

(19) பக்கம் பார்க்க...

## இனந்தெரியாதோர் தாக்குதல்; முகமாலை மாணவன் படுகாயம்

### சப்ரகமுவ பல்கலையில் சம்பவம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாணவர்கள் விடுதிக்குள் வைத்து முகமூடி அணிந்தவர்களினால் அவர் தாக்கப்பட்டுள்ளதாக சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளாகிய மாணவன் கிளிநொச்சி மாவட்டம் முகமாலைப் பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் (வயது-20) என்பவராவார்.

இரவு நீண்ட நேரம் படித்துவிட்டு உறங்கச் சென்றிருந்த அந்த மாணவன் இடையில் இயற்கைத் தேவையைக் கழிப்பதற்காக தனது அறைக்கு அருகில் உள்ள கழிப்பறைக்குச் சென்றபோதே தாக்குதலுக்கு

(19) பக்கம் பார்க்க...

### மாணவனை பார்க்க அனுமதி மறுப்பு; இன்றைய பரீட்சை புறக்கணிப்பு

தமிழ் மாணவர்கள் அறிவிப்பு

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற தமிழ் மாணவன் மீதான தாக்குதல் சம்பவத்தை அடுத்து அவரை வைத்திய சாலையில் சென்று பார்வையிடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி மறுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றைய தினம் நடைபெறவுள்ள பரீட்சையினைப் புறக்கணிக்கப் போவதாக அங்குள்ள தமிழ் மாணவர்கள்

(19) பக்கம் பார்க்க...

### அனுமதியற்று அனுப்பப்பட்ட அமைதிப்படை

## நட்வர்சிங்கின் கருத்தை கண்டிக்கும் மணிசங்கர் ஐயர்

இந்திய அமைச்சரவையின் அனுமதி இன்றி இலங்கைக்கு அமைதிகாக்கும் படையினர் அனுப்பி வைக்கப்பட்டதாக, இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் வெளியிட்டிருந்த கருத்துக்கு மீண்டும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வன் லைப் இஸ் நொட் இனாவ்' என்ற அவரது புத்தகத்தில் நட்வர்சிங் இதனைத் தெரிவித்திருந்தார்.

எனினும் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மணிசங்கர் ஐயர் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த காலப்பகுதியில் நட்வர் சிங், மாநில வெளிவிவகார அமைச்சராகவே செயற்பட்டிருந்தார்.

அவருக்கு உயர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

இந்திய அமைதிகாக்கும்

(19) பக்கம் பார்க்க...

## ஐ.நா. ஆணைக்குழு முன் இராணுவ அதிகாரிகள் சாட்சியம்

### என்கிறார் ஜெஹான் பெரேரா

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைக் குழுவிடம் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் சாட்சியமளிக்க உள்ளதாக இலங்கை சிவில் சமூக ஒன்றியத்தின் பேச்சாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் சர்வதேச விசார

(19) பக்கம் பார்க்க...

## பல்கலை மாணவன் தாக்குதல்; உரிய விசாரணை வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவன் தாக்கப்பட்டதற்கு உரிய விசாரணை நடத்தப்படுவதுடன், ஏனைய மாணவர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க ஆகியோரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலை வளாகத்துக்குள் இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்துவது மாணவர்களின் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தியுள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கிளிநொச்சி-முகமாலையைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் எனும் முதலாம் ஆண்டு மாணவன் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

இனந்தெரியாதவர்கள் என்று கூறப்படுகின்ற இருவரினால் இத்தாக்குதல்

(19) பக்கம் பார்க்க...



# அரச ஊழியர்களின் இடர்களை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

யாழ். நகரில் சப்பல் வீதியில் அமைந்துள்ள மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் ஆராயப்பட்டது. அத்துடன் புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டது.

யாழ். மாவட்ட இணைப்பாளர் மு.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் க.அன்ரனி, கே.தவசீலன், எஸ்.ஜெயசங்கர் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர். (140)

## ஆஸி.யில் படுகொலை செய்யப்பட்ட

## கிளி. ஊற்றுப்புலம் குடும்பஸ்தரின் சடலம் 7 மாதங்களின் பின்னர் எடுத்துவரப்பட்டது



(யாழ்ப்பாணம்)

கடந்த 16.01.2014 அன்று அவுஸ்ரேலியாவில் வைத்து இனந்தெரியாத சிலரால் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்ட கிளிநொச்சி - பளையை சொந்த இடமாகவும் ஊற்றுப்புலத்தை வதிவிடமாகக் கொண்ட சிவபெருமான் கேதீஸ்வரன் பூதவுடல் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு ஏழு மாதங்களுக்கு பின்னர் கொண்டு வரப்பட்டு இறுதிக் கிரியைகள் இடம் பெற்றது.

கடந்த வருடம் யூன் மாதம் படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்குச் சென்ற கிளிநொச்சி, பளையை சொந்த இடமாகவும், ஊற்றுப்புலம் கிராமத்தை வதிவிடமாகவும் கொண்ட சிவபெருமான் கேதீஸ்வரன் (வயது - 35) என்பவரே 16.01.2014 அன்று அவுஸ்ரேலியாவில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

கேதீஸ்வரன் குறித்த தினத்தன்று தொழிலுக்குச் செல்லாமல் வீட்டில் இருந்த நிலையில் சில இளைஞர்கள் வீட்டின் கதவினை தட்டியுள்ளனர்.

இதன்போது வீட்டு உரிமையாளர்கள் கதவினைத் திறந்த போது உள்நுழைந்த இளைஞர்கள், கேதீஸ்வரனை கத்தியால் குத்தியுள்ளனர். இதன்போதே கேதீஸ்வரன் உயிரிழந்தமை குறிப பிடத்தக்கது.

கொலை செய்யப்பட்ட கேதீஸ்வரன் திருமணமாகி இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். மனைவியும் பிள்ளைகளும் ஊற்றுப்புலத்தில் வசித்து வருகின்றனர். மிகவும் வறிய குடும்பமான கேதீஸ்வரனுக்கு ஐந்து வயது மகனும் மூன்று வயதில் மகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

# குடும்பநல மாதுக்கள் நியமனம் அனுமதிக்காக கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைப் பகுதியில் கடமையாற்ற குடும்பநல மாதுக்களை நியமனம் செய்வதற்கான யாழ். மாநகர சபையின் கோரிக்கை வடக்கு மாகாண சபைக்கு அனுப்பிவைக்கப்பட விருப்பதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாநகர சபையில் நடைபெற்ற 7 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதும் தகைமை அடிப்படையில் இந்த குடும்பநல மருத்துவ மாதுக்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவர்களுக்கான பயிற்சிகள் யாழ். போதனா வைத்தியசாலை தாதிகள் பயிற்சிக் கல்லூரிகளில் வழங்குவதற்கும் ஆலோசிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# வெளிநாட்டிலிருந்து வந்தவரின் தங்கச்சங்கிலி அபகரிப்பு

## தடுக்க முற்பட்டவேளை கத்திக்குத்து

(திருநெல்வேலி)

கல்வியங்காடு புலவனார் வீதியில் தங்கச்சங்கிலி ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த இவர் சம்பவ தினம் இரவு தனது வீட்டுக்கு அண்மித்ததாகவுள்ள நண்பர் ஒருவரின் வீட்டிலிருந்து கதைத்துவிட்டு தனது வீடு நோக்கி சென்று கொண்டிருந்தபோது தலைக்கவசத்தினால் தலையையும் முகத்தையும் மறைத்தவாறு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் திடீரென்று ஓடிவந்து அவரது கழுத்தில் கையை வைத்து அவர் அணிந்திருந்த சுமார் இரண்டரை பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அறுத்துள்ளார்.

இதன்போது ஏற்பட்ட இழுபறியில் சங்கிலியைப் பறிகொடுத்தவரின் நாடிப்பகுதியில் கொள்ளையர்கள் கத்தியால் குத்தியுள்ளனர்.

இச்சம்பவத்துக்கு முதல்நாள் இரவு இவரது வீட்டின் ஓட்டைப் பிரித்து வீட்டுக்குள் இறங்கிய திருடர்கள், இவர் திடீரென்று விழித்துக்கொண்டதினால் பெறுமதிமிக்க இவரது கைத்தொலைபேசியை திருடிக்கொண்டு மறைந்துள்ளனர்.

இவரது குடும்பம் வெளிநாட்டில் வதியும் நிலையில் தேவையின் பொருட்டு இவர் யாழ்ப்பாணத்திலுள்ள தனது வீட்டுக்கு அண்மையில் விடுமுறையில் வந்திருந்தார். (137)

# பகல் வேளையில் தாலிக்கொடி பறிப்பு

(வரணி)

வரணி, மாசேரிப் பகுதியில் இருந்து மாவில் ஊடாக துவிச்சக்கர வண்டியில் பயணித்த பெண்மணி ஒருவரின் சுமார் ஐந்து பவுண் நிறை கொண்ட தாலிக்கொடி கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை மாவில் வெளிப்பகுதியில் பகல் வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத திருடனால் பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில், குறித்த பெண்மணி தாலி ஒட்டு வேலைக்காக நகைக் கடைக்கு தாலியை கைப்பையினுள் கொண்டுசென்றதாகவும் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் திருடன் கைப்பையுடன் சேர்த்து பறித்துச் சென்றதாகவும் சம்பவம் நடந்த இடம் ஆட்களற்ற வயல் வெளிப் பிரதேசமானதால் திருடனுக்கு சாதகமாக அமைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (150)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2551 திகதி 02-08-2014

ஆங்கில எழுத்து: T

வெற்றி எண்கள்: 24 37 39 57

போனஸ் இல: 68

ஜக்பொட் பரிசு ரூ.12,380,650/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 192020 | 20/- | 3,840,400/- |
| 2 இல | 13637 | 100/- | 1,363,700/- |
| இல | 300 | 1,000/- | 300,000/- |
| இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7661 | 40/- | 306,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 564 | 1,000/- | 564,000/- |
| இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,380,650/- | - |
| 1 இல + போனஸ் இல | 9112 | 100/- | 911,200/- |
| 2 இல + போனஸ் இல | 433 | 500/- | 216,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 347 | 200/- | 69,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 224104 | | 9,077,140/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.08.06 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 12,904,275/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3761)


## மண்ணெண்ணெய் அருந்திய சிறுமிக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

விளக்கிலிருந்த மண்ணெண்ணெய்யை தவறுதலாக எடுத்து குடித்த ஒன்றரை வயது சிறுமி ஒருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை, காக்கைதீவைச் சேர்ந்த சந்துரு ஐஸ்வரியா என்ற ஒன்றரை வயது சிறுமியே தாய், தந்தையுடன் நல்லூர் ஆலயம் சென்று திரும்பி தாகத்தை தணிக்க இவ்வாறு மண்ணெண்ணெய்யை அருந்தியுள்ளார். (இ)

## பகல்வேளை துணிகர கொள்ளை ஏழாலை மத்தியில் அச்சம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மத்தி சிவகுரு வீதி, சாடியடி பகுதியில் கடந்த வாரம் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நடைபெற்ற பகல்கொள்ளையினை தொடர்ந்து அப்பகுதி பொர்துமக்கள் பெரும் அச்சத்தில் காணப்படுகின்றனர்.

குறித்த பிரதேசத்தில் வாழும் பொதுமக்களின் தகவல்களின்படி குறித்த சிவகுரு வீதி, சாடியடிப் பகுதியில் பகல்வேளை வீட்டின் கதவுகளை உடைத்து பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை திருடியமை பல ஆண்டுகளின் பின்னர் இதுவே முதல் தடவை எனத் தெரியவருவதோடு, சனநெரிசலும், வீடுகளும் நெருக்கமாக காணப்படும் இப்பிரதேசத்தில் இவ்வாறான துணிகர பகல்கொள்ளை இடம்பெற்றமை கவலையையும் பயத்தையும் அளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெறாதிருக்க அனைவரும் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (66)

## ‘தினமுரசு’ செய்திக்கு பலன்

## நவாலி பொதுச்சந்தை பகுதியில் அகற்றப்பட்டன குப்பை கூழங்கள்

நவாலி பொதுச்சந்தைப் பகுதியில் காணப்பட்ட குப்பை கூழங்கள் அகற்றப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இதுபற்றிய செய்தியினை தினமுரசு செய்தியாக வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சந்தைப்பகுதியில் காணப்பட்ட குப்பை கூழங்கள் அகற்றப்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் தெரிவிக்கையில்,

சம்பந்தப்பட்டவர்கள் உரிய காலப்பகுதியில் சேரும் குப்பை கூழங்களை அகற்றுவதன் மூலம் பொதுமக்களின் அசௌகரியங்களை தவிர்க்க முடியும் எனத் தெரிவிக்கின்றனர். (66)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# இடைநிலைத்தரங்களுக்கான பாடத்திட்டத்தில் மறுசீரமைப்பு

## 2015 முதல் அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் 8 வருடங்களுக்கு ஒரு முறை பாடசாலை பாடவிதானம் மறுசீரமைக்கப்பட வேண்டியதன் தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டமையினால் 2007 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கல்வி மறுசீரமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை பாடவிதானத்தை மறுசீரமைக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது. இதற்கமைய கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு சபை மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பரிந்துரைக்கமைய 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இடைநிலைத்தரங்கள் (6 - 11) பாடவிதான மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய 2006.03.07 ஆம் திகதி இலக்கம் 2006/9 கொண்ட சுற்றறிக்கை மற்றும் 2007.03.07 ஆம் திகதிய இலக்கம் 2007/6, 2008.04.21 ஆம் திகதி இலக்கம் 2008/12 மற்றும் 2008.09.15 ஆம் திகதிய இலக்கம் 2008/12 (i) கொண்ட சுற்றறிகை மறுசீரமைப்புக்களுக்கு மேலதிகமாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

இச்சுற்றறிக்கை மூலம் இடைநிலைத் தரங்களின் பாடங்கள் மற்றும் கால எல்லையில் மாற்றங்கள் ஏற்படாது என்பதுடன், பாட உள்ளடக்கம் மாத்திரம் மறுசீரமைக்கப்படும்.

2015 ஆம் ஆண்டில் 6 மற்றும் 10 ஆம் தரங்களுக்காகவும், 2016 ஆம் ஆண்டில் 7 மற்றும் 11 ஆம் தரங்களுக்காகவும், 2017 ஆம் ஆண்டில் 8 ஆம் தரத்திற்காகவும், 2018 ஆம் ஆண்டில் 9 ஆம் தரத்திற்காகவும், இம் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானங்கள் அமுல்படுத்தப்படும், மேலும் பழைய பாடவிதானம் 2015 ஆம் ஆண்டில் 7,8,9 மற்றும் 11 ஆம் தரங்களுக் காகவும், 2016 ஆம் ஆண்டில் 8 மற்றும் 9 தரத்துக்காகவும், 2017 ஆம் ஆண்டில் 9 தரத்துக்காகவும் அமுலில் இருக்கும்.

இம் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானங்களை அமுல்படுத்தும் போது பாடசாலை நேரசூசி முன்னர் இருந்தவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட இம் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானத்தை தொடரும் மாணவர்கள் முதல் தடவையில் 2016 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

அந்த வகையில் உரிய மறுசீரமைப்புக்கமைய செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் ஆரம்ப தரங்களின் பாடவிதான மறுசீரமைப்புக்கள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு கல்வி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (66)

# வீதியோரங்களில் கழிவு ஐந்து சந்தியில் அசிங்கம்

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் மானிப்பாய் வீதியில் வீதியோரங்களில் கொட்டப்படும் கழிவுகளால் அவ்வீதியால் செல்லும் மக்கள் பெரும் துர்நாற்றத்தைத் தாங்கியவாறு செல்ல வேண்டியுள்ளது.

முட்டைக்கோது, இறால் கோது மற்றும் விலங்குக் கழிவுகள் உட்பட வீட்டுக்கழிவுப் பொருட்கள் சொப்பின் பைகளில் கட்டப்பட்டு வீதியோரத்தில் வீசப்படுகின்றன.

இக்கழிவுப் பொருட்களை நாய்கள் எடுத்து வந்து அயலில் உள்ள வீட்டு முற்றங்களில் போடுவதால் இப்பிரதேச மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்குகின்றனர். காகங்கள் இக்கழிவுப் பொருட்களை எடுத்துச் சென்று கிணறுகளுக்குள் போடுவதால் குடிநீர் மாசடைவதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுகாதார பரிசோதகர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)



யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவனும் மிருதங்கக் கலைஞர் கண்ணதாசன், நடன ஆசிரியை பாலினி கண்ணதாசன் ஆகியோரின் மூத்த மகனும் கண்ணதாசனின் கலை வாரிசுமாகிய க.இசைநிலவனின் மிருதங்க அரங்கேற்றம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது... (48)

# முதுகலைமாணி கற்கை விண்ணப்பிக்க வாய்ப்பு

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புக்கள் பீடம் முதுகலை மாணி - தமிழ் கற்கைநெறிக்காக விண்ணப்பங்களைத் தகுதியானவர்களிடமிருந்து கோரியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டம் பெற்றவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். தமிழ் மொழிமூலம் நடைபெறும் ஒருவருடகால இக் கற்கை நெறிக்கான கட்டணம் 75,000 ரூபாவாகும், விண்ணப்பகட்டணம் 500 ரூபா.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் உயர்பட்டப்படிப்புக்கள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கிளையில் 162-1001-8-0000900 என்ற கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தைச் செலுத்தி உயர் பட்டப்படிப்புக்கள் அலுவலகத்தில் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்ப முடிவு எதிர்வரும் செப்ரெம்பர் 9 ஆம் திகதியாகும். (10)

# திருவிழாவுக்கு ஒரு கதை அரசியலுக்கு ஒரு கதையா?



வடபுலத்தான் எழுதுவது...

இப்ப நீங்கள் ஆராவது நல்லூருக்கோ யாழ்ப்பாணத்துக்கோ வந்து பார்த்தியளெண்டால், அப்பிடியே ஆச்சரியப்பட்டுப்போவியள்.

அந்தளவுக்குச் சனக் கூட்டமும் காப்புக்கடை, ஐஸ்கிறீம்கடைகளும் பெடிபெட்டையளின்ரை குதூகலமும் பட்டுப்புடவைகளின்ரை சரசரப்பும் மினுக்கமும் கோயில் வளாகத்தைச் சுற்றிநிறுத்தி வைச்சிருக்கிற வாகனங்களும்...

எண்டு பார்க்கக் குளிர்ச்சியாக இருக்கு.

இதைத்தான் கண்கொள்ளாக் காட்சி எண்டு சொல்லிறது....

இதையெல்லாம் பார்க்க எவ்வளவு சந்தோசமாயிருக்கு...!

இப்பிடியொரு காட்சியைக் காணிறதுக்காகத்தானே எத்தினையோ காலமாக காத்துக்கொண்டிருந்தம்.

சனங்கள் சந்தோசமாக இருக்கோணும். அதுக்காகத்தானே எவ்வளவோ கஸ்ரங்களையெல்லாம் பட்டு உத்தரிச்சம்.

எல்லாத்துக்கும் கிடைச்ச ஒரு பெறுமதியைப்போல, நல்லதொரு காலத்துக்கு நல்லதொரு துடக்கம் எண்ட மாதிரி இந்தக் கொண்டாட்டம் இருக்கெண்டுதான் என்ரை மனசில படுகுது.

நல்லூருக்கு வாற ஒவ்வொருத்தற்றை முகத்தையும் கூர்ந்து, கூர்ந்து உன்னிப்பாகப் பாக்கிறன்.

ஒரு கவலையும் எங்களுக்கில்லை எண்டமாதிரி அத்தினை சந்தோசமாயிருக்கு.

நல்லூர்க்கந்தா...! இப்பிடியே நீ வன்னிச் சனங்களையும் தண்ணிக்குத் தவிச்சுக்கொண்டிருக்கிற தீவுச்சனங்களையும் சந்தோசக்கடலில மூழ்க வைச்சாயெண்டால்... உனக்கும் வெற்றி. சனங்களாகிய எங்களுக்கும் வெற்றி...

ஆனால், நல்லூர்க்கந்தா, நீ அப்பிடியான ஆளில்லை. மனசில வஞ்சத்தையோ ஓரவஞ்சினையையோ வைச்சுக்கொண்டுதான் நீ நடக்கிறாய்...

நகரத்தில, வசதியான இடத்தில வாய்ப்பாக உனக்கு இடம் கிடைச்சதால நீ மற்ற எல்லாத்தையும் மறந்திட்டியா....

இல்லையெண்டால், உன்னட்டை அடிக்கடி வாற அரசியல்வாதிகளோட கூடிப்பழகிய பழக்கத்தில இந்த மாதிரிப் புறத்தி காட்டுகிற குணம் உனக்கும் வந்ததோ....?!

ஏனெண்டால், நீ நல்லாக் கொண்டாடுவாய்...

செல்வச்செழிப்போட இருப்பாய்.... சனப்புழக்கமும் குதூகலமுமாய் எப்பவும் இருப்பாய்....

ஆனால், இஞ்சால தீவுப்பக்கமோ, தென்மராட்சி, வடமராட்சியின்ரை வெளிப்பக்கத்திலயோ... வன்னிப்பக்கத்திலயோ... பசியும் பஞ்சமும் தண்ணிப்பற்றாக்குறையுமாக.... சனங்கள் கிடந்து அல்லாடுதுகள்.

வலி.வடக்கில இன்னும் சீராகச் சனங்கள் குடியேறவேயில்லை.

இதில சில இடங்களில மக்கள் குடியேறுகிறதுக்கு ஆமி இன்னும் அனுமதிக்கேல்ல. ஆமி விட்டுக்குடுத்த இடங்களில சனங்கள் குடியேறேல்ல.

இதையெல்லாம் நீ கண்டும் காணாமலா இருக்கிறாய் கந்தா...?

வசதியான இடத்தில வந்து குந்திவிட்டால் பிறகு எல்லாத்தையும் மறந்து போறது பிறவிக்குணமா...

வசதிக்குணமா... சொல் முருகா...!

உன்னை நம்பியவர் கைகளைக் கைவிடாதே கந்தா...!

ஆனால், உன்னை நம்புகிறதே கஸ்ரம்போல இருக்கே கடம்பா...!

ஏமாற்றுவோரும் ஏமாறுவோரும் உன்னுடைய சந்நிதானத்தில் நிரந்தரமாகக் குடியிருக்கிற காரணத்தினால், நீ இதையெல்லாம் கண்டும் காணாமல் இருக்கிறாயா...!

சொல்லு முருகா...!

இந்தத் திருவிழா முடிஞ்சாப்பிறகு, பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில ஏறின கதையாக.... 'இஞ்ச – யாழ்ப்பாணத்திலயும் மனிசர் இருக்கேலுமோ...'

'அடுத்த வீட்டுக்குப் போறதுக்கே ஆமிக்காரனிட்டத்தான் அனுமதி எடுக்கோணும்' யாழ்ப்பாணத்தில மூச்சு விடுகிறதெண்டாலும் அதுக்கும் அனுமதியை எடுக்கோணும்' எண்ட கணக்கில ஆயிரம் கதைகள் வரும்.

கந்தா அதுக்கெல்லாம் நீ வாய் திறக்கமாட்டாய்...

நீ சுழியனெல்லோ.... அரசியல்வாதிகளோட கூட்டு வைச்சிருக்கிற ஆளெல்லோ..

அதால எல்லாத்துக்கும் ஒரு சிரிப்பே பதிலாக இருக்கும்.

புன்னகை மன்னா... பொன்னகை அணிந்தவா... கந்தா.... ஒரேயொரு தடவை வாய்திறந்து உண்மை சொல்லய்யா...

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. -ஆபிரகாம்லிங்கன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முன்னேற்றம் கொண்டுவரும் அபாயம்!

பலரது நேரத்தை விழுங்கிக் கொண்டிருக்கும் இன்ரர்நெற்றும் சமூக வலைத்தளங்களும் பணத்தையும் ஏமாற்றி விழுங்கிவிடக் கூடிய அச்சம் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு இணையத்தள மோசடி பற்றிய உலகளவிலான புள்ளி விபரங்கள் வெளியாகி அதிர்ச்சியளித்தபடி இருக்கிறது.

இணையத்தளம் பயன்படுத்தும் இளைஞர்களில் 56 வீதம் பேர் ஏதோ ஒருவகையில் இணையத்தள மோசடிக்கு ஆளாகிக் கொண்டு தானிருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறது ஒரு சைபர் கிரைம் அறிக்கை.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க, இணையதள மோசடிகள் (சைபர் கிரைம்) எண்ணிக்கையும் அதற்கேற்ப அதிகரித்தே வருகிறது. விதவிதமான அறிவுநுட்பத்துடன் இந்தக் குற்றங்கள் நடைபெறுகின்றன.

உலகின் மூலைமுடுக்கெல்லாம் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று அறியும் ஆர்வமும், உலகெங்குமுள்ள மனிதர்களுடன் முடிந்தவரை தொடர்புகொண்டு நட்பாடும் துடிப்பும் நமக்கு இருப்பதொன்றும் பிழையானதல்ல. இந்த வேட்கைதான் தொழிநுட்பத்தின் வேகவளர்ச்சியை ஏற்படுத்தி, தகவல் தொடர்பாடல் விரைவின் மூலம் உலகைச் சுருக்கி வருகிறது.

∴பேஸ்புக், ட்விற்றர் போன்ற சமூக வலைத்தளங்கள் இன்று எண்ணற்ற மனிதர்களை இணைத்து வைத்திருக்கின்றன. எந்தவொரு சந்தேகத்திற்கும் தேவைக்கும் உடனுக்குடன் வழிகளும் ஆலோசனைகளும் சொல்ல வல்ல விற்பன்னர்களையும் நண்பர்களையும் நம் சட்டைப்பைக்குள்ளேயே வைத்துக்கொண்டு திரிய முடிகிறது. ஆமாம், இணையத்தள வசதியுடன் கூடிய செல்போன்கள் இப்போது எல்லோரும் வாங்கக்கூடிய விலைகளில் கிடைக்கின்றன.

இணையத்தளத்தில் பெறக்கூடிய அனைத்துச் சேவைகளையும் இப்போது செல்போனிலேயே செய்துவிட முடியும். அனைத்து வங்கிகளுமே செல்போன்மூலம் பணப் பரிமாற்றுப் பணிகளைச் செய்வதற்கு வாடிக்கையாளர்களை ஊக்கப்படுத்துகின்றன. இதற்காக தனிக்கட்டணம் இல்லை. வெறும் குறுந்தகவல் அனுப்பும் அதே செலவுதான்.

ஆனால், பயன்பாடு அதிகரித்த அளவுக்கு, அதன் மூலம் வரக்கூடிய ஆபத்து குறித்த எச்சரிக்கை உணர்வு அதிகரிக்கவில்லை. குறிப்பாக இளைஞர்கள் இதை விளையாட்டுப் பொருள்போலவே பயன்படுத்துகின்றனர் என்று விசனம் தெரிவித்திருக்கிறது அந்த அறிக்கை.

அதிக அளவில் களவு போகும் பொருள் செல்போன் என்பதாலும், இணையவழி மோசடியில் ஈடுபடுவோர் இத்தகைய செல்போன் பயன்பாட்டைக் குறிவைத்து தங்கள் மோசடி வலைகளை விரிக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

தேவையில்லாத மின்னஞ்சலுக்குப் பதில் அளிப்பதன் மூலம் அல்லது இணைய தளத்தின் வழியாக, அறிமுகம் இல்லாத நிறுவனங்களில் பொருள்கள் வாங்கும்போது தேவையில்லாத தகவல்களை, விவரங்களைத் தாராளமாகத் தெரிவிப்பதன் மூலமும் தங்கள் ரகசியக் குறியீடுகளை வெளிப்படுத்திக் கொள்வதாலும் பல இழப்புகளைச் சந்திக்க நேர்கிறது.

குறிப்பாக, சமூக வலைத்தளங்களில் எதைப் பகிர்ந்துகொள்வது என்ற கட்டுப்பாடே இல்லாத நிலை உள்ளது.

இவ்வாறு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோர் தொகை நாளுக்குநாள் வேகமாக அதிகரித்து வருகிறது. சீனாவில் மட்டும் தற்சமயம் 60 கோடிக்கு மேற்பட்டோர் இணைய தளத்தைப் பயன்படுத்துகின்றனர்.

எண்ணிக்கையில் அதிகரித்தாலும், பயன்படுத்துவோரின் எச்சரிக்கை உணர்வு அதிகரித்துள்ளதா என்றால், இல்லை என்கிறது அறிக்கை.

"முன்னேற்றம் என்று அழைக்கப்படுவது 'அபாயம்'தானே?" என்று ஜோஷ் வண்டேலூவின் நாவல் குறிப்பிடுவதைத்தான் நினைக்கத் தோன்றுகிறது.

- ஆசிரியர்.

# தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருந்த 62 மாணவர்கள் பொறியியல் பீடத்துக்கு

தமிழக முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதி மாணவர்களில் 62 பேர் 2014/15 ஆம் கல்வியாண்டில் பொறியியல் படிப்புக்களில் சேர்ந்துள்ளனர்.

இவர்களில் 40 பேர் அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் பொறியியல் படிப்புக்களில் சேர்ந்துள்ளனர். இலங்கையிலிருந்து அகதிகளாகக் குடியேறுபவர்களின் குழந்தைகள் தமிழகத்திலுள்ள பள்ளிகள், கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழகத்தில் உள்ள 110 அகதி முகாம்களைச் சேர்ந்த 2,200 மாணவ, மாணவிகள் இப்போது பள்ளி, கல்லூரிகளில் படித்து வருகின்றனர்.

2014 மார்ச் மாதம் நடைபெற்ற பிளஸ் 2 பொதுத் தேர்வை 687 இலங்கை அகதி மாணவர்கள் எழுதினர். இவர்களில் 604 பேர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்றவர்களில் பலர் கலை அறிவியல் கல்லூரியிலும், பாலிடெக்னிக்கிலும் சேர்ந்தனர். பொறியியல் படிப்புகளில் சேருவதற்காக 60 இற்கும் மேற்பட்டோர் அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் ஒற்றைச் சாளர கலந்தாய்வுக்கு விண்ணப்பித்திருந்தனர். கலந்தாய்வு முடிய இன்னும் இரு நாள்களே உள்ள நிலையில், சனிக்கிழமை வரை 40 பேர் பொறியியல் இடங்களைத் தேர்வு செய்து கல்லூரி சேர்க்கைக் கடிதத்தையும் பெற்றுள்ளனர்.

இதற்கிடையே, பிளஸ் 2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற அகதி மாணவர்கள் 22 பேருக்கு தனியார் பொறியியல் கல்லூரிகள் சில பொறியியல் கல்வியை படிக்க இலவச இடங்களை அளித்துள்ளன. இதன் மூலம், 2014/15 ஆம் கல்வியாண்டில் இதுவரை 62 இலங்கை அகதி மாணவர்கள் பொறியியல் படிப்புகளில் சேர்ந்துள்ளனர்.

கலந்தாய்வு நிறைவு பெற இரண்டு நாள்கள் உள்ளதால் மேலும் சில மாணவர்கள் பொறியியல் படிப்புகளில் சேர வாய்ப்பு உள்ளது என இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்கான அமைப்பின் நிர்வாகி பத்மநாபன் தெரிவித்தார்.

# ஆஸி.அகதிகள் விவகாரம் உள்ளிருந்து கிளம்புகிறது கண்டனம்

(சிட்னி)

ஆஸி.நோக்கி படகில் பயணித்த அகதிகளை கையாண்ட விதம் முற்றிலும் தவறானது என இப்போது கண்டனக்குரல் கிளம்பியுள்ளது. இலங்கை அகதிகள் 157 பேரையும் நௌரு தீவுகளில் தடுத்து வைத்திருப்பது தொடர்பில் அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் மீது தீவிரமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

50 சிறுவர்கள் உட்பட்ட 157 இலங்கை அகதிகள் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களை நவுரு தீவுகளுக்கு அனுப்பியமை பொறுப்பற்ற செயல் என்று தொழில்கட்சியின் குடிவரவு பேச்சாளர் ரிச்சட் மார்லஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்திய அதிகாரிகளை சந்திக்க வைப்பதைக் காட்டிலும் அகதிகளை கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பியிருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த 157 இலங்கை அகதிகளும் இந்திய அதிகாரிகளுடன் பேச மறுத்தமையை தொடர்ந்தே நவுரு தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அகதிகளின் சட்டத்தரணிகளே காரணம் என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இருப்பினும் தாம் அகதிகளை இந்திய அதிகாரிகளுடன் பேசவேண்டாம் என்று கூறவில்லை என்று அகதிகளின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பல ஆண்கள் அவுஸ்ரேலிய அதிகாரிகளால் பலவந்தமாக விமானத்தில் ஏற்றப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் நவுரு தீவுக்கு சென்றுள்ள இந்த அகதிகள் அதிர்ச்சியடைந்தவர்களாக உள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நௌரு தகவல்களின்படி குறித்த 157 பேரையும் தங்கவைக்க போதிய இடவசதிகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நவுரு தீவில் ஏனைய நாட்டு அகதிகள் அமைதியான போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்போராட்டத்தின் ஒரு பகுதியாக நேற்று சோமாலிய பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் எதிர்க்கட்சிகளை இந்த விடயத்தில் கண்டித்துள்ள அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அபோட் நவுரு தீவில் குறித்த 157 அகதிகளும் குடியமர்த்தப்படுவர். அது வெற்றியளிக்காதுபோனால் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என்று எச்சரித்துள்ளார்.

# தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பொலிகண்டி சிறுவன் மீட்பு

யாழ்.முனியப்பர் ஆலய சூழலில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிகண்டி சிறுவன் ஆலய அடியார்களினால் மீட்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இதில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்விகற்று வரும் பொலிகண்டி புதுவளவைச்சேர்ந்த ஆனந்தசாமி ஆனந்த நிமலன் (வயது-14) என்ற சிறுவனே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவராவார்.

குறித்த சிறுவனின் தீய பழக்க வழக்கம் தொடர்பில் தகப்பனாரினால் தண்டிக்கப்படுவது வழமையாகி இருந்த நிலையில், கடந்த முதலாம் ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு இரவாகியும் வீடு திரும்பவில்லை. இவ்விடயத்தில பெற்றோர்கள் கவனம்செலுத்தாத போதிலும் சிறுவன் நேற்றுக் காலை யாழ்.முனியப்பர் ஆலய சூழலிலுள்ள மரமொன்றில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் ஆலயத்திற்கு வருகை தந்த அடியார்களினால் கண்டு மீட்கப்பட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் சிறுவனின் பெற்றோரை அழைத்து விசாரணை மேற்கொண்ட பின் யாழ்.சிறுவர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து நீதவான் சிறுவனை நன்னடத்தைப்பாடசாலையில் சேர்க்குமாறு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (116)

# மேல்மருவத்தூர் அம்மனின் கஞ்சிக்கலச ஊர்வலம் நேற்று

(யாழ்ப்பாணம்)

மேல்மருவத்தூர் அம்மனின் ஆடிப்பூர கஞ்சிக் கலசம் எடுத்து வரும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.நல்லூரில் இடம் பெற்றது.

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து சிவப்பு ஆடைகளுடன் பெருந்தொகையான பெண்களுடன் ஆண்களும் சேர்ந்து தலையில் கஞ்சிக் கலசத்தை சுமந்தவாறு சிவன் வீதி, கோவில் வீதி, சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தை முற்பகல் வந்தடைந்து அங்கு மேல்மருவத்தூர் அம்மனுக்கான பக்தி பரவசமான அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றன.

மேல்மருவத்தூர் அம்மனின் திருவுருவச் சிலை முன்னே எடுத்துவர அதனைத் தொடர்ந்து நீண்ட நடைபவனியில் அடியார்கள் வந்து கொண்டிருந்தனர். "ஓம் சக்தி, ஓம் சக்தி" என்னும் நாமத்தை உச்சரித்தவாறு அவர்கள் மிகவும் பக்திபூர்வமாக நடைபவனியில் கலந்து கொண்டிருந்தனர். (137)

## எழுகதிரோன் கட்டுரையிலிருந்து

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஏன் ஒழிக்க வேண்டும்?

**பிரதான இரு கட்சிகளுக்கும் ஆதரவு வழங்குவதினூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட மாட்டாது என்பதால் வேறான ஒருவரை நியமித்து தமிழ் மக்களின் பலத்தை வெளிக்காட்ட வேண்டும் எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பலமாக குரல் எழுப்பியுள்ளனர். எத்தனை தடவைதான் தமிழனின் பலத்தைக் காட்டுவது?**



**சென்றமுறை ஜனாதிபதியோடு முரண்பட்டு நின்ற பொன்சேகா பொது வேட்பாளர் தூண்டிலில் மாட்டிகொண்டதைப் போல இம்முறை ஜனாதிபதியுடன் முரண்பட்டு நிற்கும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்காவுக்கு துண்டில் போடப்படுகிறது. சூடுகண்ட பூனை பொன்சேகா அருகிலிருக்க ஷிரானி அடுப்பங்கரையை நாடத் துணிவாரா என்பதை காலம்தான் தீர்மானிக்கும்.**

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஏன் ஒழிக்க வேண்டும்" என்ற தொனிப்பொருளில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கடந்த 17.07.2014 அன்று ஒன்றுகூடலொன்று இடம்பெற்றது. இவ்வொன்றுகூடலை மாதுலுவாவே சோபித்த தேரர் தலைமை வகிக்கின்ற சமூக நீதிக்கான தேசிய இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த ஒன்றுகூடலில் பல முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தமை அடுத்த ஜனாதிபதி தேர்தல் குறித்த பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக எதிர்தரப்பில் யார்யாரெல்லாம் போட்டியிடக்கூடும் என்னும் எதிர்பார்ப்பினையும் தூண்டிவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன், ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி சிராணி பண்டாரநாயக்க போன்றோரின் இந்த ஒருமித்த சந்திப்பு முக்கியமான தொன்றுதான்.

அத்தோடு மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரிய, ஜாதிக ஹெல உறுமயவின் உப தலைவர் உதய கம்மன்பில ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான அசோக்க அபேசிங்க, பாலித்த ராங்கே பண்டார, நவ சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர, மேல் மாகாண சபை உறுப்பினர் ஹர்சன ராஜகருணா என பலதரப்பட்ட எதிரணியினரும் ஒருமித்துள்ளமை உண்மையிலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையிட்ட அதிருப்திகளின் வெளிப்பாடா? அன்றி ஜனாதிபதி ராஜபக்ச மீதான பழிவாங்கும் உணர்வுகளின் சங்கமமா? என்னும் கேள்விகளும் எழாமலில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்றும் இதை நோக்கி பிரதான கட்சிகள் இணங்காவிட்டால் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க நேரிடும் என்றும் இந்த பொதுவான வேட்பாளர் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டு மூன்று மாதங்களில் நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்வார் எனவும், சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுலுவே சோபித தேரர் கடந்த சில மாதங்களாக பேசிவருகின்றார்.

மேற்படி இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஏன் ஒழிக்க வேண்டும்" எனும் கருத்தரங்கில் தான் பல முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களும் பங்கெடுத்திருக்கின்றனர். இதையொட்டி இதோ வருகிறார் சந்திரிகா பண்டாரநாயக்க, அதோ வருகிறார் ஷிரானி பண்டாரநாயக்க என்று அடுத்த ஜனாதிபதி குறித்த ஆருடங்கள் களைகட்டுகின்றன. தமிழ்தேசிய நாளிதழ்கள் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷாவை இப்போதே வீட்டுக்கு அனுப்பிவிட்ட சந்தோஷத்தில் துள்ளிக்குதிக்கின்றன.

நாட்டின் பிரதான எதிர்கட்சியான ஐ.தே.க. பலவீனமாக இருப்பதும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தோல்விகளின் நாயகனாக இருப்பதுவும் பொதுவேட்பாளர் பற்றிய ஒரு தேவையை தென்னிலங்கையில் உருவாக்கியுள்ளது என்பது உண்மைதான். இந்த பொது வேட்பாளர் தேடும் படலம் மிக சுவாரஷ்யமானது.

இவ்வருட ஆரம்பத்திலும் ஒருதடவை இந்த பேச்சு அடிபடத் தொடங்கிய போது ஏன் பொதுவேட்பாளரொருவராக தமிழர் ஒருவரை அங்கீகரிக்க முடியாது என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதுபற்றிய வாதப்பிரதிவாதங்கள் உருவாகமுன்பே சிங்களமக்கள் அதுகுறித்து என்ன சொல்கின்றார்கள் என்று அறிய முன்பே மனோ கணேசன் வழமைபோல சட்டியைப் போட்டுடைத்தார்.

எங்கள் முதலமைச்சர் நீதிமான் விக்கி ஐயாவை ஏன் ஜனாதிபதியாக்க முடியாது? என்று சவால் விட்டார். வட மாகாண சபையையே கொண்டிழுக்க முடியாமல் சேடமிழுக்கும் விக்கியா? என்று சிங்களப் பத்திரிகைகள் கேள்வியெழுப்ப அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று ஐ.தே.க. அடித்துச் சொல்லிவிட்டது.

ஏதோ பிரபாகரனுக்குப் பிறகு அடுத்த தமிழ் தேசிய தலைவராகத் ரணில் விக்கிரமசிங்கவை இதயத்தில் ஏந்தித்திரியும் தமிழ்தேசிய ஜேர்னலிச குஞ்சுகள் அத்தோடு வாயடைத்துப் போயின. அது என்ன பொதுவேட்பாளர் கிழக்குத் தமிழர் வரமுடியாதா? ஒரு மலையகத் தமிழர் வரமுடியாதா? ஒரு முஸ்லிம் தலைவர் வரமுடியாதா? ஏன் தமிழ்த் தேசியவாதிகளால் இப்படியெல்லாம் சிந்திக்க முடியவில்லை.

இந்த பொது வேட்பாளர் விளையாட்டுத் தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இராணுவ ஜெனரல் சரத் பொன்சேகாவை மண்கவ்வச் செய்தது. அத்தோடு அவரது குடியுரிமைக்கும் ஆப்புவைத்தது. இம்முறை அடுத்த ஒரு பொதுவேட்பாளரைத் தேடும்படலம் தொடங்கியிருக்கிறது.

மிக நீண்ட காலமாகவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கவுள்ளார் என்று கிசுகிசுக்கள் வருவதற்கும் இதுவே காரணமாகும். ஒருபுறம் இன்றைய ஜனாதிபதியின் குடும்ப ஆதிக்கம் மீதான அதிருப்திகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களிடையே அதிகரித்து வருகின்றமையை பயன்படுத்திக்கொள்ள சந்திரிகாவின் மீள்வருகை பயன்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் மறுபுறம் சந்திரிகா ஒரு பொது வேட்பாளராகக் களத்தில் நின்றாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் எப்படி சந்திரிகாவுக்காக களத்தில் இறங்குவர்? அது நிரந்தரமாகவே ஐ.தே.க. வின் வாக்கு வங்கியை சிறிலங்கா சுதந்திர கட்சியிடம் தாரைவார்த்து கொடுப்பதாக அமைந்து விடாதா? கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

அதனால் சந்திரிகாவின் வருகையை ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு எதிர்கொள்ளும் என்பது மிக பெரியதொரு கேள்வியாகும். அப்படியே சந்திரிகாவின் வருகை சாத்தியமானால் அதுவே ஐக்கிய தேசியக் கட்சி மேலும் பலவீனமாகவும் பிளவுபடவும் அதுகாரணமாகலாம் என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில்தான் சென்றமுறை ஜனாதிபதியோடு முரண்பட்டு நின்ற பொன்சேகா பொது வேட்பாளர் தூண்டிலில் மாட்டிக்கொண்டதைப் போல இம்முறை ஜனாதிபதியுடன் முரண்பட்டு நிற்கும் முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிரானி பண்டாரநாயக்காவுக்கு துண்டில் போடப்படுகிறது.

பொது வேட்பாளராக போட்டியிடக் கூடிய தகமைகளை ஷிரானி பண்டாரநாயக்க கொண்டிருப்பதாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எந்தவொரு அரசியல் கட்சியுடனும் தொடர்பு பேணாத பக்கச்சார்பற்ற ஓர் பொது வேட்பாளராக ஷிரானி பண்டாரநாயக்க கருதப்படுகின்றார். குற்றப் பிரேரணை மூலம் பதவி கவிழ்க்கப்பட்டது முதல் இதுவரையில் ஷிரானி எந்தவொரு அரசியல் கூட்டத்திலும் பங்கேற்றதில்லை என்றெல்லாம் அவருக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

சூடுகண்ட பூனை பொன்சேகா அருகிலிருக்க ஷிராணி அடுப்பங்கரையை நாடத் துணிவாரா என்பதை காலம்தான் தீர்மானிக்கும்.

இந்த ஓட்டத்தில் நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்கெடுக்கும் முனைப்பிலுள்ளது. அதனால்தான் மேற்படி ஒன்று கூடலில் தலைவர் ஆர். சம்பந்தன் கலந்துகொண்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரில் ஒரு பகுதியினர் கூற அடுத்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து நின்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும் எனக் கூறிவருவதாகவும் அறியமுடிகிறது.

பிரதான இரு கட்சிகளுக்கும் ஆதரவு வழங்குவதினூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட மாட்டாது என்பதால் வேறான ஒருவரை நியமித்து தமிழ் மக்களின் பலத்தை வெளிக்காட்ட வேண்டும் எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பலமாக குரல் எழுப்பியுள்ளனர். எத்தனை தடவைதான் தமிழனின் பலத்தைக் காட்டுவது?

ஆயினும் அடுத்த சாரார் எதிர்க்கட்சி வேட்பாளருக்கு ஒப்பந்த அடிப்படையில் சில விடயங்களை முன்வைத்து அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். இது நியாயமான எண்ணமாகும். எப்படியிருந்த போதிலும் சென்றமுறை போல சிவாஜிலிங்கம் தரவழிகள் தனித்து நின்று கர்ச்சிக்கலாம்.

இதனடிப்படையில் தேர்தல் நெருங்க நெருங்க தமிழத் தேசியக் கூட்டமைப்பினுள் காணப்படும் நீறுபூத்த நெருப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதியும் கோரிக்கை மீண்டும் தீப்பற்றியெரியும் எனவும் எதிர்பார்க்கலாம்.

உண்மையிலேயே இந்த பொது வேட்பாளர் விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் நன்மைக்காக நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியும்.

தமிழர்களின் அரசியல் அபிலாசை தமிழர்களின் இறுதித்தீர்வு என்று புலம்பும் கூட்டமைப்பு, தமிழ்மக்களின் மீட்பர்களாக தம்மைக்காட்டி தமிழ் மக்களின் வாக்குகளை அள்ளி சுருட்டி கொள்ளும் கூட்டமைப்பு எப்படியான கோரிக்கைகளுடன் எவ்விதமான நிபந்தனைகளுடன் இந்த பொது வேட்பாளர் விடயத்தை அணுகப் போகிறது என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ●

## வறட்சி பாதித்த குடும்பங்களுக்கு

# மீண்டும் வலுவடைகிறது நிவாரணக் கோரிக்கை

(கொழும்பு)

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகிறது.

அதேவேளை வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான வசதி வழங்கல் தொடர்பில் தயாரிக்கப்படுகின்ற அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நேற்றுமுன தினம் - இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பல்வேறு மாவட்டங்களில் மக்கள் வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ளதை தாம் நேரில் கண்ட தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் 14 மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த வறட்சியின் காரணமாக 11 இலட்சத்து 50 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் தாங்கள் எதிர்நோக்கியுள்ள பாதிப்புகள் குறித்த ,விபரங்களை வழங்குகின்றனர்.



இதேவேளை வறட்சியினால் ஊவா மாகாணத்தில் காணப்படும் தோட்டப் பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் நிதி செயலாளர் ஏ.அரவிந்த்குமார் தெரிவித்துள்ளார்

இந்த நிலையில் நிவாரண வழங்கலின் போது அவர்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்று அரவிந்த்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்

## சிறிலங்கா எயார்லைன்ஸ் அலுவலகம் மீது

## திருச்சியில் கல்லெறித் தாக்குதல்

# இதுவரை இருவர் கைது

(கொழும்பு)

தமிழகம் திருச்சியில் உள்ள ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் அலுவலகத்துக்கு கல்லெறித் தாக்குதல் நடாத்திய இரண்டு பேரை பொலிஸார் கைதுசெய்து பின்னர் விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் ஜனநாயக குடியரசு கட்சியின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் மாவட்ட அமைப்பாளர் ஆகியோரே கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் வாடிக்கையாளர்களைப் போன்று குறித்த அலுவலகத்துக்குள் சென்று அங்கு தாக்குலை நடாத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின பாதுகாப்பு இணையத்தளத்தில் தமிழக முதல்வரை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தை கண்டித்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை பாதுகாப்பு அமைச்சின் கட்டுரையை பாரத்த பின்னர் தற்கொலைக்கு முயன்ற அண்ணா திராவிட முன்னேற்றக்கழக சேலம் மாவட்ட பெண்கள் அமைப்பு உறுப்பினரான விஜயலட்சுமி ஆபத்தான கட்டத்தை தாண்டிவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இவர் தூக்கவில்லைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

# இந்திரனுக்கு இடமாற்றம்

களுத்துறை மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் வி.இந்திரன் உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் தலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னர் யாழ். மாவட்டத்திலும் கடமையாற்றியவர்.

சேவை நிமித்தம் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

களுத்துறை மாவட்டத்திற்கு பொறுப்பான புதிய பிரதி பொலிஸ்மா அதிபராக சுமித் எதிரிசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊவா தேர்தல்களம் இப்போது சூடு பிடிக்கிறது

(கொழும்பு)

ஊவா மாகாணசபை தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள நிலையில் அங்கு அரசாங்கத்தின் பிடி தளர்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே அரசாங்க உயர் மட்டத்தில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கடுமையான போட்டி ஒன்று இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனினும் அபிவிருத்தியை காட்டி மக்களை திசைதிருப்புவதற்காக தேர்தல் காலம் என்றும் பார்க்காமல் பாரிய அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

எனினும் அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகளான அமைசசர் விமல் வீரவன்சவின் கட்சி தனியாக போட்டியிடுவது அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் பார்வையாளர்களின் கருத்துப்படி ஏற்கனவே அமைச்சரின் கட்சி சார்பில் ஊவா மாகாணசபை உறுப்பினரர்களாக இருந்த இருவர் கட்சி மாறியுள்ள நிலையில் அமைச்சரின் கட்சி தனியாக போட்டியிடுவதால் அதற்கு ஆசனம் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஒரு பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய தேர்தலில் போட்டியிடாத போதும் அரசாங்கத்துக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

குறிப்பாக ஜாதிக ஹெல உறுமயவின் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க வேலைப் பளு காரணமாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடமாட்டார் என்று கட்சி அறிவித்துள்ளது.

எனவே அரசாங்கத்துக்கு சங்கடமான நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மறுபுறத்தி[illegible] அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேர்தலில் வாக்கு பின்னடைவை சந்திக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மருமகனுமான செந்தில் தொண்டமான் தேர்தல் தொடர்பில மேற்கொண்டு வரும் பிரசாரம் வாக்காளர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாள் ஒன்றுக்கு இலங்கையின் தமிழ் பத்திரிகைகளில் முன்பக்கத்தில் வர்ண தேர்தல் பிரசார விளம்பரத்தை அவர் மேற்கொண்டு வருகிறார். இ[illegible]காக பாரிய நிதியை அவர் ஒது[illegible]கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கும் திட்டங்கள்

# அதிக அளவு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டின் முதல் நானகு மாதங்களில் நீர்வழஙகல் மற்றும் சுகாதாரத் திட்டங்களிற்கென மட்டும் 3013 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தேசிய வரவு செலவுத் திட்டத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றுள் பாரிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டங்களுக்காக மாவட்டங்கள் ரீதியாக 1721 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களாக யாழ்ப்பாணம, கிளிநொச்சி, பதுளை, ஆலிஎல, எல்லறுகு ணுபுர, சிலாபம், வவுனியா மன்னார், புத்தளம், கொழும்பு, நீர்கொழும்பு, களனி, கொலன்னாவ, பலாங்கொட, தம்புள்ள, குருநாகல், பொலன் னறுவை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, மொனராகலை, மேலும் கம்பஹா போன்றவையாகும்.

சிறிய நகர்ப்புற நீர்வழங்கல் திட்டம் மற்றும் குடியிருப்புக்களின் நீர்ப்பாசனத்திட்டங்களுக்காக 826 மில்லியன் செலவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் இதுவரை 312 முறைப்பாடுகள்

## ஜனாதிபதி ஆணைக்குழுவிடம்




(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு மன்னார் மாவட்டத்திலிருந்து 312 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பிலான சாட்சி விசாரணை இம் மாதம் எட்டாம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை மன்னார் மாவட்டத்தில் இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டி.குணதாஸ தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்கனவே கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மக்களின் சாட்சியங்களை பதிவு செய்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு தடவைகள் ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்றபோது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலான தகவல்களையும் சேகரித்து வருகின்றது.

## தகவல் அறியும் சட்டம்

# அமுல்படுத்தப்படாதது ஏன்?

### ஐ.தே.கட்சி கேள்வி

தகவல் அறிந்துகொள்ளும் சட்டம் அமுல்படுத்தப்படாத ஒரே தெற்காசிய நாடு இலங்கையாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

தகவல் அறிந்துகொள்ளும் சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் விரும்பவில்லை என அவர் சுட்டிக்காட்டிள்ளார்.

அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படாத காரணத்தினால் சட்டத்தை அமுல்படுத்த தயக்கம் காட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் தலைமைத்துவ பேரவை தலைவர் கரு ஜயசூரிய உள்ளிட்டவர்கள் பல தடவைகளில் தகவல் அறிந்துகொள்ளும் சட்டத்தை அமுல்படுத்த முற்சித்த போதிலும்அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தை அறிமுகம் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி எடுக்கும் முயற்சிகளை அரசாங்கம் தடுத்து நிறுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தும்

## தேவை எதுவும் அரசுக்கு இல்லை



(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

நடுநிலையான நிலைப்பாட்டைக் கொண்டவர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க புலம்பெயர் தமிழர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என அவர் மேலும் கூறினார்.

புலிகளின் குரலை ஆணைக்குழுவில் ஒலிக்கச் செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் மேலும் கூறினார்

பயஙகரவாத அமைப்பு அல்லது பயங்கரவாத நிதிகளில் இயங்கி வரும் தரப்பினரின் கருத்துக்களுக்கு ஆணைக்குழுவில் இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நிபுணர் குழு நியமிக்கப்பட்டதன் நோக்கம் பாதிக்கபபட்டவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கே தவிர சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்கல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளை இலக்கு வைத்து ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# முழங்காவில் வைத்தியசாலைவரை

## பேருந்துசேவையை நடத்த கோரிக்கை

(முழங்காவில்)

ஏ - 32 பிரதான வீதியூடாக சேவையில் ஈடுபடும் அரச தனியார் பேருந்துகள் முழங்காவில ஆதார வைத்தியசாலை வரைக்கும் சேவையில் ஈடுபட ஆவன செய்யுமாறு முழங்காவில் முதியோர் சங்கம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

இவ் வைத்தியசாலைக்கு தினசரி 30 - 40 வரையான நோயாளிகள் பேருந்துகளில் பத்தினிப்பாய், செக்காலை, பாலாவி, பொன்னாவெளி, வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி, திக்குவில், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், கணேசபுரம், தேவனபிட்டி, மூன்றாம்பிட்டி, பாலியாறு போன்ற தூர இடங்களிலிருந்து வந்து மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வைத்திய சேவையைப் பெறுகின்றனர்.

குறிப்பாக பிரதான வீதியில் இருந்து பல கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் இவ்வைத்தியசாலைக்கு பேருந்தில் வரும் பயணிகள் சந்தியிலிருந்து நடந்தும் துவிச்சக்கர வண்டிகளிலும் பயணத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் வயோதிபர், இயலாதவர்கள், ஊனமுற்றோர், கர்ப்பிணித் தாய்மார், கைக்குழந்தை உடையோர், அஸ்மா நோய், இருதய நோயாளர் போன்றோர் தூரத்தில் இருக்கும் இவ் வைத்தியசாலைக்கு மிகவும் கஷ்டப்பட்டு, வேதனையுடன் அடிக்கடி இருந்தும், நடந்தும் ஆட்டோ பிடிக்க வழியின்றி பரிதவிக்கும் அவலநிலையில் காணப்படுகின்றனர்.

எனவே இந் நோயாளிகளின் துயர் நீக்க மனிதநேய மனப்பாங்குடன் இவ்வைத்தியசாலை வரைக்கும் பேருந்து சேவைகளை நடாத்த உரியவர்கள் ஆவன செய்யுமாறு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## நல்லூர் ஆலயச்சூழலில் இன்று....

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் நான்காம் நாளான இன்று நக்கீரரும் திருமுருகாற்றுப் படையும் என்னும் விடயம் பற்றி இந்துதர்மாசிரியர் த.மனோஜ்குமார் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி, நாச்சிமார் கோவிலடி காமாட்சி அம்பாள், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள், கொக்குவில் ஸ்ரீ ஞானவைரவர் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

♦ ♦ ♦

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

நான்காம் நாளான இன்று யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களான ற.சங்கீதவாணி, மு.அனுசித்ரா, ஜீ.பிரபாலினி, கா.நிஷேதனா, சி.மதுஷா ஆகியோரின் குழுப்பாடலும், செல்வி எஸ்.சிவானுஜாவின் இசையரங்கமும் இடம்பெறவுள்ளன. (42)

## சுகாதார குழுவினர் மண்டைதீவுக்கு விஜயம்

யாழ்.சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகள் குழுவினர் கடந்த வியாழக்கிழமை மண்டைதீவுக்கு விஜயம் செய்து அங்குள்ள சுகாதார நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

6 பேர் கொண்ட குழுவினர் கிராமத்தின் முதலாம் இரண்டாம் வட்டாரங்களில் குடியிருப்புக்கள் மற்றும் வெறும காணிகளைப் பார்வையிட்டு பொதுமக்களுடன் கலந்துரையாடினர். (23)

## சின்னமடு மாதா திருவிழா

(யாழ்.நிருபர்)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் சின்னமடு மாதாயாத்திரிகர் ஸ்தல நவநாள் திருவிழா கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

இன்று மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நற்கருணை ஆராதனையும் நாளை 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் திருவிழா திருப்பலியும் இடம்பெற்று திருச்சொரூப பவனியும் இடம் பெறவுள்ளது. (10)

## முரசின் இன்றைய பலன்




(04.08.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 19 ஆம் திகதி.
அமிர்தம் / அட்டமி.
சுவாதி நட்சத்திரம் மு.ப. 07.14 வரை. பின் விசாகம்.
இராகு காலம் 07.34 - 09.04 வரை. சுபநேரம் 12.04 - 01.34 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | நண்பரின் கருணையால் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு வேலை பெற்றுச்செல்லல், பாதுகாப்பற்ற இடத்திற்குச் சென்றதால் பிரச்சினையில் சிக்குப்பட்டு தெய்வாதீனமாக உயிர்தப்பிவரல். |
| ரிஷபம் | உதவி கேட்கச் சென்ற மாமனார் கையைவிரித்து விட்டமை கண்டு உறவில் விரிசல் ஏற்படல், ஏற்கனவே எடுத்த ஒப்பந்தங்கள் நஷ்டத்தை ஏற்படுத்தியமையினால் புதியவற்றில் கைச்சாத்திட பின்னடித்தல். |
| மிதுனம் | நோய் குணமடைவதற்கு கவனக்குறைவாக இருந்தமையினால் துயர் ஏற்படல், இயந்திரங்கள், தீ, நீருடன் உறவு வைக்கையில் மிக மிக அவதானமாக இருங்கள். |
| கடகம் | துவிச்சக்கரவண்டியின் பாகம் உடைந்ததினால் விபத்தேற்படல், பாம்பினை அடித்துக்கொன்றதால் தோஷம் ஏற்படலாம் என்ற அச்சநிலையும் பதகளிப்பும் பாதித்தல். |
| சிம்மம் | கௌரவம் கிடைக்காது என்று நினைத்தமையால் அழைக்கப்பட்ட நிகழ்விற்கு செல்லாது விடல், மாமன் மாருடன் சில நாட்களாக நிலவிய கருத்து வேற்றுமை விலகி சந்தோஷம் ஏற்பட்டுவிடல். |
| கன்னி | விளம்பரம் செய்தும், விவாக பொருத்துனரிடம் தொடர்பு கொண்டும் விவாகத்திற்கு ஏற்றவரன் கிடைக்காமையினால் கவலை கொள்ளல், தற்கொலை செய்ய முயன்றவரின் பிரச்சினையைச் செவிமடுத்து புத்திமதி புகன்றதால் எண்ணத்தைக் கைவிடல். |
| துலாம் | காணாமற் போய்விட்ட பொருளை அறிய சோதிடமும் மைபார்க்கும் முயற்சியிலும் ஈடுபடல், ஒரு பொழுதும் அறிமுகமில்லாதவர்பேச்சுக்கொடுத்தபோது உறவினை வெட்டிவிடல். |
| விருச்சிகம் | விவாகவயதினை எட்டாத பெண்பிள்ளையை கடத்திச் செல்ல முற்பட்டமை முறியடித்துவிடல், வெளிநாடு சென்று நீண்டகாலம் தொடர்பு இல்லாத கல்லுமனமாக இருக்கும் பிள்ளையை எண்ணி பித்தாக இருக்கும்பெற்றோர் கவலையில தத்தளித்தல். |
| தனுசு | மின்சார ஒழுக்கில் கவனம் எடுத்ததினால் நேரவிருந்த பெரிய ஆபத்து விலகிவிடல், சம்சாரத்தின் ஆதங்கத்தைக கணக்கிலெடுக்காமையினால் வீட்டின் கவிநிலை அற்றுப் போதல். |
| மகரம் | குடும்பத்தில் அக்கறையின்றி நடக்க முற்படும் கணவருடன் பிரச்சினை ஏற்படல், புதிய மனை அமைக்க ஏற்ற நிலத்தினை தெரிவு செய்ய ஜோதிடரை நாடுதல். |
| கும்பம் | நீரிழிவு நோயைக்கட்டுப்பாட்டில் வைத்திருக்க உணவுப் பழக்கவழக்கத்தைக்கடைப்பிடித்தல், காகித திருமண உறவினை வெட்டிவிட்டு திருமணம் புரிய தாயகம் வந்து சேரல். |
| மீனம் | அமோக விளைச்சலை எதிர்பார்த்த பயிரினம் நோயினால் பாதிக்கப்பட்டதைக் கண்டு ஆறாத்துயரடைதல், அடகுவைக்கக் கொண்டு வந்த நகை போலியானது என உணர்ந்ததால் பணம் கொடாமை. |

## நல்லைக் கந்தனுக்கு இன்று 4 ஆம் நாள் திருவிழா



### சிந்தைக்குள் புகுந்தவனே!

குந்தகமே இல்லாத கந்தகூட்டம் திரளட்டும்
விந்தைபல நாட்டியவன் வீதியுலா நடக்கட்டும்
வெந்தபுண்ணில் வேல்நுழைந்து வேதனையை ஆற்றட்டும்
நொந்தமனம் அனைத்துமிங்கே நோவாறித் திளைக்கட்டும்
கந்தையோடு நின்றகந்தன் அலங்காரம் கொள்ளட்டும்
சிந்தைக்குள் புகுந்தவனே சிறப்பெல்லாம் அருளட்டும்
சந்தம் நிறைந்தகவிச் சரங்களெங்கும் தொங்கட்டும்
செந்தண்மை பூண்டொழுகும் எண்ணமங்கே ஓங்கட்டும்
தந்திரமும் தவறுகளும் அவனருளால் மறையட்டும்
அந்தர வாழ்வகன்று ஆழவேர் ஊன்றட்டும்
எந்தநிலை வந்தாலும் அவனைமனம் எண்ணட்டும்
தொந்திமகன் தம்பிக்குத் திருவிழாக்கள் சிறக்கட்டும்
சந்திதெரு எல்லாமே சரவணமாய் மாறட்டும்
பந்தியெலாம் சேவல்கொடி பரவசமாய்ப் பறக்கட்டும்

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்-

### அடியவர் மனம் மகிழ்ந்திடுமே!

விண்ணதிர மேளதாளங்கள் முழங்கும்
மண்ணிருந்து கோபுரங்கள் விண்தொடும்
மேகங்கள் கலைந்து முருகா
மோகங்கள் கொள்ளுமுன் அழகில்
கண்நிறைந்த திருக்காட்சி கண்டு
மாடகூடங்களும் மந்திரம் சொல்லும்
கழலாட கருணையிருகண்ணாக கன்னியரின்
சிலம்பு மாட அடியவர் மனம் மகிழ்வா வீதி உலா!

-மண்டைதீவு மகிழ்நன்-

### துயர் தீர்ப்பாய் குமரையனே!

விடிவொன்று தருவாயா வடிவேலனே
வினைபோக்கி எமையாளும் உமைபாலனே
அடியார்தம் அகமெல்லாம் குடிகொண்டவா
அயிலேந்தி மயிலேறி வலம்கண்டவா
இடியோசை கேட்கின்ற அரவங்களாய்
இனம்வாழ உனக்கென்ன மனமேங்கையா
கொடுமைகள் அகல துயர்தீர்ப்பாய் குமரையனே
குலங்காக்கும் நல்லூரின் முருகையனே!

-கவிஞர் - நயினை இராகுலன்-

### குறைதீர்க்கும் குமரா!

தொல்லூரில் பிறந்தவரே! சொக்கநாதர் மைந்தரே!
நல்லூரில் குடி கொண்டவரே! நாளுமடியவர் குறைதீர்ப்பவரே!
உள்ளக்குகையில் உறைபவரே! உலகளந்த வல்லவரே!
மெல்லமயில் ஏறிவாருமையா! மேதினியில் ஒளியேற்றிடவே!

-கவிஞர் சரசாலையூரான்-

### உருகிடும் பக்தி!

அடியாரின் அரோகரா ஆர்ப்பரிக்கும் கோஷங்கள்
துடிப்பதில் வெயில் சூடு தூள்கிளப்பும் - மடியதிலே
நெருப்பாகத் தகிக்கும் நெருக்கடி நிலைமைகளால்
உருக்கிடும் பக்தியாம் உரு!

-நவாலியூர்க்கவிராயர்-





# ஜமேக்கா சாதனையுடன் தங்கம்

(கிளாஸ்கோ)

கொமன் வெல்த் விளையாட்டு விழாவின் ஆண், பெண்களுக்கான 4X100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமேக்க அணி புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளது.

உலகின் அதிவேக ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட். ஜமேக்காவை சேர்ந்த அவர் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனையாளராக இருக்கிறார்.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் அவரது அதிவேக ஓட்டத்தைக் காணும் ஆவலுடன் இரசிகர்கள் இருந்தனர். ஆனால் காயம் காரணமாக 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை.




உடல் தகுதி பெற்றதால் நள்ளிரவு நடைபெற்ற 4X100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் பங்கேற்றார். 4ஆவதாக ஓடிய அவர் இங்கிலாந்து வீரரை பின்னுக்கு தள்ளி ஜமேக்காவுக்கு தங்கப் பதக்கம் பெற்றுக் கொடுத்தார். அவரது மின்னல் வேக ஓட்டம் பிரமிப்பு ஊட்டும் வகையில் இருந்தது.

நிக்செல், கேமர் பெய்லி, ஜேசன் லிவிர்மோர், உசைன்போல்ட் ஆகியோரை கொண்ட ஜமேக்கா அணி 37.58 வினாடியில் கடந்து தங்கப்பதக்கம் வென்றது. அத்தோடு புதிய கொமன்வெல்த் சாதனையை அந்த அணி நிகழ்த்தியது. இங்கிலாந்து வெள்ளிப் பதக்கமும் (38.02 வினாடி), டிரினிடாட் அணிவெண்கலப் பதக்கமும் (38.10 வினாடி) பெற்றது. இதேபோல பெண்களுக்கான 4ஒ100 மீற்றர் தொடர் ஓட்டத்திலும் ஜமேக்கா அணி தங்கம் வென்று புதிய கொமன்வெல்த் சாதனை படைத்தது. அந்த அணி 41.83 வினாடியில் கடந்தது. நைஜிரியா (42.92 வினாடி), இங்கிலாந்து (43.10 வினாடி) ஆகிய அணிகளுக்கு முறையே வெள்ளி,வெண்கலப்பதக்கம் கிடைத்தன.

மேலும் பெண்களுக்கான 4X400 மீற்றர் தொடர் ஓட்டத்திலும் ஜமேக்கா அணி தங்கம் வென்று புதிய கொமன் வெல்த் சாதனை நிகழ்த்தியது. பந்தய தூரத்தை 3 நிமிடம் 23.82 வினாடியில் கடந்தது. நைஜிரியாவுக்கு வெள்ளியும், இங்கிலாந்துக்கு வெண்கலமும் கிடைத்தது. ஆண்களுக்கான 4X400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் இங்கிலாந்து அணி (3 நிமிடம் 00.46 வினாடி) தங்கம் வென்றது.

## பதக்கப் பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 56 | 55 | 54 | 165 |
| அவுஸ்ரேலியா | 45 | 42 | 45 | 132 |
| கனடா | 31 | 16 | 34 | 081 |
| ஸ்கொட்லாந்து | 19 | 14 | 19 | 052 |
| இந்தியா | 14 | 28 | 19 | 062 |
| நியூசிலாந்து | 14 | 12 | 17 | 043 |
| தென்னாபிரிக்கா | 13 | 10 | 16 | 039 |



## 84 வருடங்களின் பின் இங்கிலாந்து வீராங்கனை சாதனை

(கிளாஸ்கோ)


கொமன்வெல்த் வரலாற்றில் 84 ஆண்டுகளுக்குப் பின், நான்கு தங்கம் வென்ற இங்கிலாந்து வீராங்கனை என்ற சாதனை படைத்தார் கிளாடியா.

கடந்த 1930இல் முதல் கொமன்வெல்த் விளையாட்டு ஆரம்பமாகியது. இதில் இங்கிலாந்து / நீச்சல் வீராங்கனை ஜோய்ஸ் கூப்பர், 4 தங்கம் வென்றார்.

இதன் பின் 1958இல் பில் ஹொஸ் கின்ஸ் (வாள் சண்டை), 1998இல் மிக் கொல்ட் (துப்பாக்கிசுடுதல்) என, இரு வீரர்கள் 4 தங்கம் வென்றனர். இப்போது கிளாஸ்கோ விளையாட்டில், கிளாடியா, 16, ஜிம்னாஸ்டிக் போட்டியில். அணி, ஓல்ரவுண்ட், வால்ட் மற்றும் புளோர் பிரிவுகளில் என, 4 தங்கம் வென்று அசத்தியுள்ளார்.

இதையடுத்து, 1930இக்குப் பின், அதாவது 84 ஆண்டுகளுக்கு அடுத்து, கொமன்வெல்த் போட்டியில் 4 தங்கம் வென்ற இங்கிலாந்து வீராங்கனை என்ற பெருமை பெற்றார்.

இந்தச் சாதனை பெருமை அளிக்கிறது என கிளாடியா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# லைக்; திறமைக்கல்ல அழகிற்கு

விளையாட்டு வீரர்களுக்கு இரசிகர்கள் இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், 17 வயதிலேயே பேஸ்புக்கில் 1.7 இலட்சம் விருப்பங்களை (like) பெற்றிருக்கிறார் ஒரு கரப்பந்தாட்ட வீராங்கனை.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய விளையாட்டுப் போட்டி தாய்வான் தலை நகர் தைபேயில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்கேற்ற கஸகஸ்தான் அணியில் சபினா அல்டின்பெகோவா (sabina altynbekova) இடம்பிடித்திருந்தார்.

ஊடகங்கள் அவரது திறமையை வர்ணித்ததோ? இல்லையோ? அவரது அழகை வர்ணிக்கத் தவறவில்லை, திடீரென பிரபலமாகி விட்டார் சபினா. அதற்குப் பிறகு, சர்வதேச ஊடகங்களும் இவர் பக்கம் கவனத்தைத் திருப்ப, இணையத்தளங்களிலும் அதிகம் தேடப்படும் பிரபலமாகி விட்டார். இவரின் உருவத்தை அனிமேஷன் செய்து சித்திரத் தொடர்களும் வெளியாகியுள்ளன.

தயவு செய்து என் அழகைவிட, என் ஆட்டத்திறனைக் கவனியுங்கள் என இரசிகர்களிடம் கெஞ்சாத குறையாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார் சபினா. ஆட்டத்தைப் பார்க்க வருபவர்கள், சபினா ஒருவர்தான் விளையாடுகிறார் என்ற ரீதியில் பார்க்கத் தொடங்கிவிட்டனர் என சபினாவின் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார். சபினா விளையாடும் காணொளிகள் யுடியூபில் அதிகம்பேரால் பார்க்கப்பட்டு வருகின்றன.



## மஹேல ஆபத்தானவர்

மஹேல ஜெயவர்த்தனவின் துடுப்பாட்டத்தை கட்டுப்படுத்தினாலேயே இலங்கை அணியை வெற்றி பெற முடியும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்த வேளையில் பாகிஸ்தான் கராச்சியில் வைத்து இதனை தெரிவித்துள்ளார். நாங்கள் இலங்கையில் வெற்றி பெற வேண்டுமாக இருந்தால் அவர்களின் துடுப்பாட்ட வீரர்களை முழுமையாக கட்டுபாட்டுக்குள் வைத்துக் கொள்ளவேண்டும். அதில் முக்கியமானவர் மஹேல ஜெயவர்த்தன. அவர் மீது எனக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. அவர் கிரிக்கெட்டில் நல்ல சாதனைகளை செய்துள்ள ஒருவர்.

ஆனால் நாங்கள் அங்கே வெல்வதற்காக செல்கின்றோம். அவர்களின் சிரேஷ்ட வீரர்கள் சிறப்பாக விளையாடுவதை தடுக்க வேண்டும். அப்போதுதான் வெற்றி பெற முடியும். இந்த தொடர் இலகுவாக எங்களுக்கு அமையாது. சவால்கள் நிறைந்ததாக இருக்கும் என மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நாளை மறுதினம் காலி மைதானத்தில் நடைபெறவுள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாசகம் அடங்கிய பட்டிக்குத் தடை




பலஸ்தீனத்துக்கு ஆதரவான வாசகங்கள் அடங்கிய கைப்பட்டியை அணிந்து விளையாட இங்கிலாந்து வீரர் மொய்ன் அலிக்கு ஐ.சி.சி., தடை விதித்தது. சௌத்தாம்ப்டன் டெஸ்டின் முதல் இரண்டு நாட்களில் மொய்ன் அலி, தனது மணிக்கட்டு பகுதியில் காஸா பகுதியை காப்பாற்றுங்கள் பலஸ்தீனத்துக்கு சுதந்திரம் அளியுங்கள் என, எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய கைப்பட்டியை அணிந்து விளையாடினார்.

இது சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) விதிமுறைக்கு எதிரானது. சர்வதேச போட்டிகளின் போது அரசியல், மதம், இனம் தொடர்பான பிரச்சினைகளை எழுப்பும் வாசகங்களை அணிந்து வீரர்கள் விளையாடக்கூடாது. இதையடுத்து மொய்ன் அலியுடன், ஐ.சி.சியின் போட்டி நடுவர் டேவிட் பூன் விவாதித்தார்.

இது மனிதாபிமான செயல் என்ற இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் வாதத்தை ஏற்க மறுத்தார். பின் சர்ச்சைக்குரிய கைப்பட்டியை அணிந்து விளையாட மொய்ன் அலிக்கு தடை விதித்தார். இப்பிரச்சினையில் மொய்னுக்கு, போட்டி சம்பளத்தில் இருந்து 50 சத வீதம் வரை அபராதம் விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. கிரிக்கெட்டில் இத்தகைய சம்பவம் நடப்பது முதல் முறையல்ல.

ஏற்கனவே 2003, உலகக்கிண்ணத்தில் தொடரின் போது அன்டி பிளவர்,ஹென்றி ஒலங்கா ஆகியோர் சிம்பாவேயில் நிலவும் அரசியல் சர்வாதிகார போக்கை கண்டித்து கறுப்பு பட்டி அணிந்து விளையாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புவனேஸ்வர் குமார் காயம் இந்தியாவிற்கு நெருக்கடி

இசாந்த் சர்மாவை தொடர்ந்து வேகப் பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமாரும் காயம் அடைந்துள்ளமை இந்திய அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்த நிலையில், அடுத்து லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடந்த 2ஆவது டெஸ்டில் இந்தியா 28 ஆண்டுகளுக்கு பின்னர் 2ஆவது முறையாக வெற்றி பெற்றுச் சாதனை படைத்தது. அந்த டெஸ்டின் 2ஆவது இனிங்ஸில் அபாரமாகப் பந்துவீசிய இசாந்த் சர்மா 7 விக்கெட் டுக்களைக் கைப்பற்றி ஆட்ட நாயகனாக ஜொலித்தார்.

கணுக்காலில் காயம் ஏற்பட்டதை அடுத்து, சௌத்தாம்ப்டன் ரோஸ் பவுல் மைதானத்தில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டில் இசாந்த் விளையாடவில்லை. அந்தப்போட்டியில் இந்தியா 266 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. இந்த நிலையில், 4ஆவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டர் ஓல்ட் டிரபோர்ட் மைதானத்தில், 7ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியிலும் இசாந்த் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மற்றொரு முன்னணி வேகப் பந்துவீச்சாளர் புவனேஸ்வர் குமாரும் காயத்தால் அவதிப்படுவது இந்திய அணிக்கு புதிய தலைவலியை கொடுத்துள்ளது. இந்திய வீரர்கள் நேற்று பயிற்சி செய்த போது இசாந்த், புவனேஸ்வர் இருவரும் அதில் பங்கேற்காமல் ஓய்வெடுத்தனர்.




அளவெட்டி தெற்கு மகாஜன சபை ஈஸ்வரன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த வாரம் முன்பள்ளி முன்றிலில் நடைபெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான பல விளையாட்டு நிகழ்வுக்ள் நடைபெற்றன. இதில் விருந்தினர் ஒருவர் உரையாற்றுவதையும், முன்பள்ளிச் சிறார்கள் ஆசிரியர்களுடன் இருப்பதையும் காணலாம்.

## விளையாட்டு செய்திகள்

# சாந்தை விநாயகர் முன்னேற்றம்

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் தாச்சி போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்திற்கு பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி முன்னேறியுள்ளது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி ஆகிய வங்கிகளின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் 18ஆவது மாபெரும் தாச்சிப் போட்டிகள் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியும் நவாலி சென். ஜெசக் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சாந்தை விநாயகர் அணி 9-5 என்ற பழம் அடிப்படையில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இப்போட்டித் தொடர் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெற்று வருகின்றது. (48)

# சாவற்கட்டு மகாத்மாவின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று

(ஆனைக்கோட்டை)

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றையு தினம் நடைபெறவுள்ளன.

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடாத்தும் கால்பந்தாட்டப் போட்டிகள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் இப்போட்டித் தொடர் அணிக்கு 5 பேர் கொண்டதாக இடம்பெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்திற்கு தாவடி காளியம்பாள், நாவாந்துறை சென் நீக்கிலஸ், நாவாந்துறை சென். மேரிஸ், ஊரெழு றோயல் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளன.

அந்த வகையில் அரையிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் எதிர் நாவாந்துறை சென் நீக்கிலஸ், மாலை 5.00 மணிக்கு நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் எதிர் ஊரெழு றோயல் அணிகள் மோதவுள்ளன. (48)

# கலிஸின் முடிவை மதிக்கின்றேன்

கலிஸ் ஒரு சிறந்த வீரர். அவரது ஓய்வு முடிவை நான் மதிக்கின்றேன். இது போன்றதொரு நிலையில் அவர் எடுத்துக் கொண்ட இந்த முடிவை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது என தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கப்டன் ஸ்மித் தெரிவித்துள்ளார். இலங்கை அணிக்கெதிரான ஒரு நாள் தொடரில் ஓட்டங்களைக் குவிக்கத் திறணிய கலிஸ் தனது நிலையை உணர்ந்து கொண்டார். தனது தேவை அணிக்குத் தேவையில்லை என்பதை உணர்ந்ததன் விளைவாகவே அவரால் ஓய்வு முடிவை உடனடியாக அறிவிக்க முடிந்தது. குடும்பத்துடன் சிறந்த தனது நாட்களை கழிக்க கலிஸை வாழ்த்துகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# உடுத்துறை பாரதி சம்பியன்

(பருத்தித்துறை)

வத்திராயன் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுத்துறை பாரதி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.


இச்சுற்றுப்போட்டியில் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த கால்பந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தன.

விலகல் முறையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் உடுத்துறை பாரதி அணியும் மருதங்கேணி கணேசானந்த அணியும் மோதின.

இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் விளைவாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் உடுத்துறை பாரதி அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக உடுத்துறை பாரதி அணியின் செல்வராஜா ஜெகமோகன், சிறந்த கோல் காப்பாளராக மருதங்கேணி கணேசானந்த அணியின் தனபாலசிங்கம் றிஷான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற அணிகள், மற்றும் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களை மருதங்கேணி பிரதேச செயலாளர் எஸ்.லிங்கநாதன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் வழங்கினர்.



சிகான் பொனி றொபேட் ஞாபகார்த்தமாக யாழ். தற்காப்பு கலையகத்தினால் நடாத்தப்பட்ட கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் சி.எஸ்.டி. சேர்ந்த பலர் கலந்து கொண்டு பதக்கங்களை அள்ளியுள்ளனர். பதக்கங்களை வென்ற சி.எஸ்.டி கராத்தே வீரர்கள், பொறுப்பதிகாரி கேணல் ரட்ணபிரிய மற்றும் கராத்தே பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ் ஆகியோருடன் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி.)

# வசந்தசிறி, தமிழ்மதி வெற்றி

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு சண்டிலிப்பாய் வசந்தசிறி மற்றும் புத்தூர் தமிழ்மதி அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரு போட்டிகள் நடைபெற்றன. முதலாவது போட்டியில் நீர்வேலி ஐக்கியம் அணியும் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வசந்தசிறி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்துநடைபெற்றபோட்டியில்தொண்டைமானாறு பொன் ஒளி அணியும் புத்தூர் தமிழ்மதி அணியும் மோதின. இதில் புத்தூர் தமிழ் மதி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. தொடர்ந்தும் போட்டிகள் நடைபெற்று வருவதாகவும் இப்போட்டிகளில் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆழ்ந்த தூக்கத்திற்கு....



ச.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ் போதனா வைத்தியசாலை

தூக்கம் ஒவ்வொரு உயிருக்கும் இன்றியமையாததும், தவிர்க்கமுடியாததும் அத்துடன் ஒரு இயற்கையான நிகழ்வும் ஆகும். இது நலமான வாழ்வுக்கும் சுகமான ஆரோக்கியத்துக்கும் அவசியம். ஒருவர் எத்தனை மணிநேரம் படுக்கையிற் படுத்து இருக்கிறார் என்பது முக்கியம் அல்ல. எவ்வளவு நேரம் நன்றாகத் தூங்குகிறார் என்பது தான் முக்கியம்.

ஆழ்ந்த தூக்கத்தின் பயன்களாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

1. பகலில் அதிகவேலை செய்த தசைகள் நரம்புகளுக்கு ஓய்வை அளிக்கிறது.

2. உடலில் அதிக சக்தியை சேமிக்க உதவுகிறது.

3. இரவு நேர உடல் வளர்ச்சி (சுரப்பு நீர்) Growth Hormone அதிகம் சுரப்பதாற் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவுகின்றது.

4. பல்வேறு நோய்களால் ஏற்படும் கலங்கள் மற்றும் திசுக்கள் மற்றும் இழையங்களில் ஏற்படும் பாதிப்புக்களைப் பழுது நீக்க உதவுகிறது.

5. எமது முகத்தசைகளுக்கும், தோலுக்கும் ஓய்வளித்துத் தோலினைச் சுருங்காதவாறு வைத்திருக்கிறது.

6. எமது உடலின் முழுமையான களைப்பைக் குறைக்கின்றது. அத்துடன் பகலில் உடலாலும், மனதாலும் இழக்கும் சக்தியை இரவில் தூக்கத்தில் மீளவும் பெறுவதற்கு உதவுகிறது.

7. பிறக்கும் புதிய நாளின் சோதனைகள், கடமைகளை எதிர்கொள்ள, உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி அளிக்கிறது.

8. எமது உடலின் நோயெதிர்ப்பு சக்தியை ஊக்குவித்து உடலைப் பாதுகாப்பதுடன், இருதயநோய்கள், உயர்குருதி அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கும் அவை ஏற்படின் அவற்றை வேகமாக குணப்படுத்துவதற்கும் ஆழ்ந்த தூக்கம் உதவுகின்றது.

9. மன அழுத்தம் மற்றும் உளம் சார்ந்த நோய்களைக் குணப்படுத்த ஆழ்ந்த தூக்கம் மிக இன்றியமையாதது.

இது போன்ற பல நன்மைகளை ஆழ்ந்த தூக்கத்தில் இருந்து மனிதன் பெறுகின்றான். தூக்கம் ஒரு மர்ம மாளிகையைப் போன்றது. அதன் வாசல்களைத் திறந்து அதனுள் மறைந்து இருக்கும் இரகசியங்களை விஞ்ஞானிகள் இன்றும் ஆராய்ந்து கொண்டு இருக்கின்றார்கள். எனினும் தூக்கத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆய்வுகள் இன்னும் முற்றுப்பெறவில்லை என்று கூடக் கூறலாம்.

ஒருவர் ஆழ்ந்த தூக்கத்தைப் பெறுவதற்குச் சில வழிகள்

1. அவரவர் வசதிக்கேற்ப முதலில் தூங்கும் இடத்தைத் தூக்கம் வருவதற்கு ஏற்றதான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற மாதிரி அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க முயலுங்கள். பாய் முதற்கொண்டு பெற்சீற் தலையணைக் கவர்வரை அடிக்கடி சுத்தம் செய்து மாற்றிக் கொள்ளுங்கள்.

2. கணினி, தொலைக் காட்சிப் பெட்டிகள் போன்ற எலக்ரோனிப் பொருள்களை படுக்கை அறையில் வைத்திருப்பதை தவிருங்கள். இவற்றில் இருந்து வெளிப்படும் மின்காந்த அலைகள் உங்கள் தூக்கத்தை கலைக்கலாம்.

3. நன்றாக தூங்குவதற்குத் தினமும் செய்யும் உடற்பயிற்சி உதவும், காலை நேர உடற்பயிற்சி நல்லது. அத்துடன் தூங்கப் போவதற்கு முன்பு செய்யும் லேசான உடற்பயிற்சி தூக்கத்தை வரவழைக்கும்.

4. ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குத் தூங்கப் போகும் பழக்கம் வேண்டும். நேரத்தை மாற்றி மாற்றிக் கண்ட நேரத்தில் தூங்குவது தூக்கத்தைக் கெடுக்கும்.

5. தூக்கத்தைக் கெடுக்கக் கூடிய மது, கோப்பி, கோலா பானங்கள், சிகரட் போன்றவற்றைத் தூங்கப் போகும் நேரத்தில் பாவிப்பதைத் தவிருங்கள்.

6. வயிறு காலியாக இருந்தாலும் தூக்கம் வராது. மிதமான இரவு, உணவு, காரமற்ற எண்ணெய் அற்ற உணவு சிறந்தது.

7. படுக்கப்போகும் முன்பு ஒரு கோப்பை பால் அருந்துவது நல்லது. பாலில் தூக்கத்தைத் தூண்டும் பொருள் "டிரிப்டோபான்" இருக்கிறது. எனினும் ஆஸ்துமா, சுவாசக்குழாய் அழற்சி, கொலஸ்ரோல் சம்பந்தமான நோயுள்ளவர்கள் வைத்திய ஆலோசனையுடன் அருந்தலாம்.

8. படுக்கப்போவதற்கு முன்பு வெது வெதுப்பான தண்ணீரிற் குளித்தல், மெல்லிய இசையை ரசித்தபடி படுப்பது, புத்தகங்கள் படிப்பது, தியானம், மூச்சுப் பயிற்சிகளைச் செய்யலாம்.

9. கதவு, யன்னல்களில் ஊடாக வரும் இயற்கையான புத்தம் புதிய காற்றுக்கு எதுவும் இணையாகாது. எனவே உங்கள் படுக்கை அறைக்கு முடியுமானால் இயற்கையான காற்று கிடைக்கக் கூடியதாகச் செய்யுங்கள். அத்துடன் குறைவான வெப்பத்தை உமிழும் மின்விளக்குகளைப் பொருத்துங்கள். இவை குளிர்ச்சியாக இருப்பதோடு இயற்கை வெளிச்சத்தை ஒத்ததாக இருக்கும்.

10. உங்கள் படுக்கை அறையின் படுக்கை விரிப்புகள், கதவு ஜன்னல் சீலைகள், மற்றும், படுக்கை அறையின் சுவர் போன்றவற்றின் நிறமானது உங்கள் கண்களுக்கும் மனதிற்கும் இதமளிக்கக்கூடிய அடர்த்தி குறைந்த நீலம், வயலட், பச்சை போன்ற மெல்லிய நிறங்களாக இருப்பது நல்லது.

11. தூங்கும்போது தலைக்கு வைத்திருக்கும் தலையணையானது தலை மற்றும் கழுத்தினைச் சரியாகத் தாங்கக் கூடியதாக மெல்லிய கச்சிதமான 4 அங்குலத்திற்கு (உயரம்) மேற்படாத தலையணையை தேவைப்படின் உபயோகியுங்கள். மற்றும் இறுக்கம் இல்லாத உடைகளை அணிதல்.

12. ஒளி உமிழும் மணி அடிக்கும் சுவர்க்கடிகாரம் சுற்றுப்புறத்தில் இருக்கும் ஒலி, மாசு அறை, புகை, தூசு ஆகியன உட்செல்வதைக் குறைக்கக்கூடியதாகப் படுக்கை அறை அமைதல் நல்லது.

13. குறட்டை விடுபவர்கள் ஆழ்ந்த தூக்கத்துக்குச் செல்வது சிரமமாதலால் குறட்டையைக் குறைப்பதற்குரிய வழிமுறைகளைக் கையாளவேண்டும். உதாரணம் அதீத பருமன் உடையவர்கள் இடது புறம் அல்லது பக்கவாட்டில் படுத்தல் வேண்டும். மல்லாந்து படுத்தலைத் தவிர்த்தல் வேண்டும்.

# இலங்கையருக்கு அது தெரியவில்லை...



– கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண
(அமரர் அ.அமிர்தலிங்கம் நினைவுப்பேருரையிலிருந்து)

எல்.ரி.ரி.ஈக்கு எதிரான யுத்தம் நடந்து கொண்டிருந்த போதே ஜனாதிபதி ராஜபக்ஷ சர்வ கட்சி மாநாட்டை கூட்டினார். அது பின்னர் அரசமைப்புத் தீர்வுக்கான யோசனைகளை முன்வைப்பதற்கான சர்வ கட்சிப் பிரதிநிதி கள் குழுவாக தோற்றம் கொண்டது. இந்த குழுவுக்கு உதவுவதற்காக 17 பேர் கொண்ட நிபுணர் குழுவையும் அவர் நியமித்தார்.

அந்த நிபுணர் குழு தங்களுக்குள் பிளவுண்டு கருத்து வெளியிட்டது. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என அனைவரையும் உள்ளடக்கிய 11 நிபுணர்கள் வலிமையான அதிகாரப் பகிர்வு உடன்பாடு ஒன்றை முன் மொழிந்தனர். சிங்களவர்களான நான்கு நிபுணர்கள் மிகக் குறைந்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை முன்மொழிய, மற்றைய இருவர் தங்களின் சொந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

மேற்படி "பெரும்பான்மையினரின் அறிக்கை" என்று கூறப்பட்ட யோசனைத் திட்டம் விரிவான அதிகாரப் பகிர்வில் இரண்டு பக்க அணுகுமுறைகளைக் கொண்டிருந்தது. சமூகங்கள் தத்தமது பிரதேசங்களில் அதிகாரத்தைப் பிரயோகித்து தமது சொந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் அதேவேளையில், மத்தியிலும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவும், பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்து தேசிய ஒன்றிணைவை மத்தி பலப்படுத்தவும் அது சிபாரிசு செய்தது.

இந்தப் பெரும்பான்மை நிபுணர்களின் அறிக்கை சிங்கள மிதவாதிகளினாலும் தமிழ், முஸ்லிம், இந்தியத் தமிழர்கள் தரப்பில் பெருவாரியானோராலும் வரவேற்கப்பட்டது. எல்.ரி.ரி.ஈயோ இந்த அறிக்கை குறித்து கருத்து எதனையும் வெளியிட முன்வராமல் போனமை ஆச்சரியத்துக்குரியதன்று. ஆனால் அது, அக்குழுவின் நிபுணர்களான தமிழர்கள் தமது இனத்தின் சார்பில் எப்படி அதில் பிரதிநிதித்துவம் செய்யலாம் எனக் கேள்வி எழுப்பியது.

நடவடிக்கைகள் மூன்று வருடங்கள் இழுபட்டன. சிங்கள தேசியக் கட்சிகள் பல கட்டங்களில் வெளிநடப்புச் செய்தன. ஆனால் அரசின் பிரதான கட்சியான ஸ்ரீ.ல.சு.கட்சி தொடர்ந்து அதில் நீடித்தது. உத்தியோகபூர்வ அறிக்கை ஏதும் வெளியிடப்படாத போதிலும், தலைவர் திஸ்ஸ விதாரண, அதன் முன்மொழிவுகளின் சுருக்கக் குறிப்பு ஒன்றை 2009 இல் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

APRC யின் முன்மொழிவுகளை முன்வைத்து, அவை குறித்து 14 விடயங்களை ஒழுங்குபடுத்தி, அந்த விடயங்கள் தொடர்பில் மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டன. "அத்தியாவசியம்", "விரும்பத்தக்கது", "ஏற்றுக் கொள்ளக்கூடியது", "தாங்கக்கூடியது", "ஏற்றுக்கொள்ளமுடியாதது", என பல்வேறு விடைகளில் ஒவ்வொன்றை ஒவ்வொரு விடயத்துக்குமான பதிலாகத் தெரிவுசெய்யும்படி மக்கள் கேட்கப்பட்டனர்.

கடைசியாக முழு முன்மொழிவு வடிவம் தொடர்பிலும் அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. அது தொடர்பில் தமிழர்கள், முஸ்லிம்கள், இந்தியத் தமிழ் மக்கள் ஆகியோர் "அத்தியாவசியம்", "விரும்பத்தக்கது", "ஏற்றுக்கொள்ளக்கூடியது", என்ற பதிலை அளித்த விகிதம் பின்வருமாறு அமைந்தது.

தமிழர் - 2009 - 82% 2010 - 83%

முஸ்லிம்கள் - 2009 - 85% 2010 - 88%


இந்தியத்
தமிழர் - 2009 - 90% 2010 - 90%

இந்தப் புள்ளி விவரங்கள் ஆச்சரியமானவை அல்ல. ஆனால் சிங்களவர்களின் பிரதிபலிப்பு ஆச்சரியம் தருவதாக இருந்தது:-
சிங்களவர் - 2009 - 59 % 2010 - 80%

அதிகாரப் பகிர்வை சிங்களவர்கள் விரும்பவில்லை. எனக் குறிப்பிட்டு அதை எதிர்த்தவர்கள் பிரசாரப்படுத்திய கட்டுக்கதைக்கு மாறாக, எல்.ரி.ரி.ஈ யின் முகத்துக்கு முன்னால் அதன் தோல்வி தோன்றியிருந்த - யுத்தம் முடிவுறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முந்திய - காலத்தில் 59 வீதத்தினர் APRC யின் முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளத் தக்கவையாகக் கண்டனர். ஒரு வருடத்தின் பின்னர் - அதாவது யுத்தம் முடிவுற்று 9 மாதங்களின் பின்னர் - அந்த எண்ணிக்கை 80 வீதமாக உயர்ந்தது.

இலங்கையின் கதை என்பது சிங்களவர்களையும் தமிழர்களையும் பொறுத்தவரை சந்தர்ப்பங்களைக் கோட்டை விட்ட விவகாரமாகவே உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை யுத்தம் முடிந்து விட்டது. ஆனால் பிணக்கு முடியவில்லை. எல்லா சமூகங்களுக்கும் அரச அதிகாரத்தை உரியமுறையில் பகிர்வதே இரண்டாவது விடயத்தை முடிவுக்குக் கொண்டு வரும் - அது எல்லா அவதானிகளுக்கும் பிரத்தியட்சமான உண்மை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இலங்கையருக்கு அது தெரியவில்லை.




# ஆகஸ்ட் 10 ஆம் திகதி சூப்பர் நிலா!

வருகிற ஆகஸ்ட் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி நாள். வழக்கம் போல வருகிற பௌர்ணமிதான். ஆனால் ஒரு வித்தியாசம். அன்று இரவு முழு நிலவானது வழக்கத்தை விட சற்றே பெரியதாகத் தெரியும். ஒப்பு நோக்குகையில் சந்திரன் நமக்கு சற்றே பக்கத்தில் இருக்கும் என்பதே அதற்குக் காரணம்.

அன்றைய தினம் நிலவு வழக்கத்தை விட சுமார் 14 சதவிகித அளவுக்குப் பெரிதாக இருக்கும். நிலவின் பிரகாசம் வழக்கத்தைவிட 30 சதவிகிதம் அதிகமாக இருக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஆகவே அன்றைய முழு நிலவை சூப்பர் நிலா என்று வருணிக்கலாம்.

பூமியை சந்திரன் சுற்றிச் சுற்றி வருகிறது. ஆனால் சந்திரனின் சுற்றுப்பாதை மிகச் சரியான வட்டமாக இருப்பது கிடையாது. ஒடுங்கிய வட்டமாக உள்ளது. ஆகவே சந்திரன் சில சமயங்களில் பூமிக்கு அருகில் இருக்கிறது. வேறு சில சமயங்களில் பூமியிலிருந்து தள்ளி இருகிறது.

ஆகஸ்ட் 10 ஆம் திகதியன்று பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரம் 3,56,922 கிலோ மீற்றராக இருக்கும். இத்துடன் ஒப்பிட்டால் ஜுலை 28 ஆம் திகதியன்று பூமிக்கும் சந்திரனுக்கும் இடையில் இருந்த தூரம் 4,06,547 கிலோ மீற்றர்.

சந்திரன் பூமியை ஒரு தடவை சுற்றி முடிக்க சுமார் 28 நாட்கள் ஆகின்றன. ஆகவே அது பூமிக்கு சற்றே அருகில் இருப்பதும் தள்ளி இருப்பதும் ஒவ்வொரு மாதமும் நிகழ்வதாகும்.

ஆனால் பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரம் குறைவாக இருந்து அன்றைய தினம் பௌர்ணமியாகவும் இருந்தால் அன்று இரவு தெரிகின்ற முழு நிலவை சூப்பர் நிலா (Super Moon) என்று வருணிக்கிறார்கள்.

எனினும் சூப்பர் நிலா தெரிகிற நாளில் நீங்கள் சந்திரனைக் கவனித்தால் உங்களால் எளிதில் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது.

– என்.ராமதுரை –


கம்யூட்டர்களுக்கு முன்பே ரோபோ பற்றிய சிந்தனை உருவாகி விட்டது. ரோபோ உருவாக்குவதை கம்யூட்டர்களின் வரவு எளிமையாக்கி மேம்படுத்தியது என்று கூறலாம். கி.மு.250 இல் டெஸிபியஸ் என்ற கண்டுபிடிப்பாளர் நீர் அருந்தக்கூடிய சிலைகளை உருவாக்கியதாகப் பதிவுகள் உள்ளன. இதுவே ரோபோவுக்கான அடிப்படை விஷயம்தானே!

இதன் பிறகு 1700களில் பலவித விந்தைகள் செய்யக்கூடிய கருவிகளைச் செய்வதில் பலர் ஆர்வம் காட்டினர். இவற்றுக்கு 'ஓட்டோமேட்டான்' என்று பெயர். பியரி ஜேக்குவர்ட்ராஸ் என்ற கண்டுபிடிப்பாளர் மிகச்சிறந்த ஓட்டோமேட்டான்களை உருவாக்கியிருக்கிறார்.

1738இல் ஜாக்குவர்ட்டே வாக்கான்சான் உருவாக்கிய ஓட்டோமேட்டான்களும் முக்கியமானவை. உயிருள்ள வாத்து போலவே, நீர்வாழ் பூச்சிகளைத் தின்று, நீர் பருகி, கழிவுகளையும் அகற்றக்கூடிய இயந்திர வாத்து ஒன்றையும் இவர் உருவாக்கினார். அது 'க்வாக் க்வாக்' ஒலி எழுப்பிக்கொண்டே நீந்தவும் செய்யும்!

ஆரம்ப கால ஓட்டோமேட்டான்கள், இயந்திரங்களால் அதிகபட்சமாக என்னென்ன செய்ய முடியும் என்பதை அறியும் பரிசோதனை முயற்சியாகவே அமைந்தன. அரண்மனையில் வாழும் அரச குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களாகவும் இவை பயன்பட்டன.

1920இல் செக் எழுத்தாளர் காரேல் கேப்பக் எழுதிய ஒரு நாடகத்தில்தான், முதன்முதலாக 'ரோபோ' என்ற வார்த்தை உலகுக்கு அறிமுகமானது. பூமியில் வாழும் மனிதர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகக் கண்டுபிடிக்கப்படும் ரோபோக்கள், ஒரு கட்டத்தில் பூமியையே அழித்து விடும் கதை இது!




# அற்புத உலகில் ஆலிஸ்

**ஆங்கில மூலம் : லூயிஸ் கரோல்**
**தமிழில் : சுகுமாரன்**

**1**

ஆலிஸும் அவளுடைய அக்காவும் ஏரிக் கரைக்கு வந்திருந்தனர். அழகான ஏரி. நீர் நிரம்பியிருந்தது. புல்வெளி பசுமையாக இருந்தது. பூஞ்செடிகள் நிறைய இருந்தன. மரத்தில் ஓர் அணில் ஏறி விளையாடிக் கொண்டிருந்தது.

ஆலிஸின் அக்கா மரத்தின் கீழ் இருந்து படித்துக் கொண்டிருந்தாள். மேலே மரக்கிளையில் அமர்ந்திருந்த ஆலிஸ் கையில் பூக்களை வைத்திருந்தாள். அவளுடைய செல்ல பூனைக்குட்டி டினா அருகிலிருந்தது. கையிலிருந்த பூக்களை ஆலிஸ் பூனையின் தலையில் வைத்தாள். அது தள்ளிவிட்டது! பூக்கள் கீழேயிருந்த அக்காவின் தலையில் விழுந்தன.

"நான் படித்துக் கொண்டிருக்கிறேன். என்னைத் தொந்தரவு செய்கிறாய்" என்று அக்கா கடிந்து கொண்டாள்.

"படம் இல்லாத புத்தகத்தைப் படிக்க உன்னால் எப்படி முடிகிறது?" என்று கேட்டாள் ஆலிஸ்.

அக்கா பதிலளிக்கவில்லை. மரத்திலிருந்து கீழே இறங்கி பூஞ்செடிகள் இருந்த இடத்திற்கு ஆலிஸ் வந்தாள்.

அப்போது கோட் சூட் அணிந்த ஒரு வெள்ளை முயல் ஓடி வந்தது. அது கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே "நான் தாமதமாகி விட்டேன், தாமதமாகி விட்டேன்" என்று சொல்லிக்கொண்டே ஓடியது.

கோட் சூட் போட்டு இருந்ததால் அந்த முயலைப் பார்த்து ஆலிஸ் ஆச்சரியப்பட்டாள்.

"மிஸ்டர் முயல், நில்லுங்க" என்று முயலின் பின்னே ஆலிஸ் ஓடினாள். முயல் ஒரு மரப்பொந்துக்குள் நுழைந்தது. சற்றும் யோசிக்காமல் ஆலிஸும் பொந்திற்குள் நுழைந்தாள்.

பொந்தினுள் ஒரு கிணறு இருந்தது. அது தெரியாமல் ஆலிஸ் கிணற்றுக்குள் விழுந்து விட்டாள். விழுந்தவள் தலைகுப்புற போய்க் கொண்டே இருந்தாள். எவ்வளவு ஆழத்திற்குள் போகிறோம் என்பது அவளுக்குத் தெரியவில்லை. உள்ளே இருட்டாக இருந்தது.

சட்டென்று ஆலிஸ் தன்னை நேராகத் திருப்பிக்கொண்டாள். அவள் இன்னும் விழுந்து கொண்டேதான் இருந்தாள். கிணற்றின் சுவரில் ஒரு விளக்கு தெரிந்தது. அதைத் திருகினாள். விளக்கு எரிந்தது. விளக்கு வெளிச்சத்தில் சுவரில் மாட்டப்பட்டிருக்கும் படங்கள் தெரிந்தன. ஓர் உலகப்படம் தெரிந்தது. உலகத்தின் மையப்பகுதிக்கே வந்திருப்பேனோ என்று ஆலிஸ் நினைத்தாள். உலகத்தின் மறுபகுதியில் மக்கள் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள்? நிச்சயம், தலைகீழாகத்தான் நடந்து கொண்டிருப்பார்கள் என்று ஆலிஸ் நினைத்தாள். அவ்வாறு நினைத்ததும் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

ஆலிஸ்க்கு அவளுடைய பூனை டினாவின் நினைப்பு வந்தது. "டினா, இன்றிரவு, நீ என்னைப் பார்க்க முடியாது" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள்.

பூனையைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் போதே ஆலிஸ் தரையில் விழுந்தாள். நல்ல வேளை, அவளுக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை. உடனே குதித்து எழுந்தாள். மேலே பார்த்தாள். ஒரே இருட்டாகத் தெரிந்தது.

அவளுக்கு முன்பாக ஒரு வழி தெரிந்தது. அந்த வழியில் வெள்ளை முயல்




போய்க் கொண்டிருந்தது. சற்றும் தாமதிக்காமல் ஆலிஸ் வெள்ளை முயலைப் பின் தொடர்ந்தாள். முயல் "தாமதமாகி விட்டது" என்று சொல்லிக்கொண்டே போய்க் கொண்டிருந்தது.

ஆலிஸ் வெள்ளை முயலை பின்தொடர்ந்தாள். ஆனால், பாதையின் திருப்பத்தில் முயலைக் காணவில்லை.

ஆலிஸ் ஒரு தாழ்வான தரைப்பகுதியை அடைந்திருந்தாள். அங்கு விளக்குகள் இருந்தன. வெளிச்சத்தில் நிறையக் கதவுகள் இருப்பது தெரிந்தது. ஆனால், எல்லாக் கதவுகளும் பூட்டப்பட்டிருந்தன.

அங்கிருந்த முக்காலியில் ஒரு தங்கச் சாவி இருந்தது. அந்தச் சாவி எந்தக் கதவையும் திறக்கப் பயன்படவில்லை. அவள் இதுவரை கவனிக்காத சிறிய கதவு ஒன்று தெரிந்தது. அந்தக் கதவுக்கு தங்கச் சாவி பொருத்தமாக இருந்தது. அவள் அந்தக் கதவிலுள்ள சாவித் துவாரத்தின் வழியாகப் பார்த்தாள். வெளியே ஓர் அழகான பூந்தோட்டம் தெரிந்தது. அந்தக் கதவைத் திறந்ததும் ஒரு எலி நுழையும் அளவிலுள்ள அதன் வழியாக ஆலிஸ் போக முடியாது. அவள் மிகச் சிறியவளாக மாறினால் போக முடியும். அவள் சிறியவளாக ஆக முடியுமா? ஆலிஸ் யோசித்துக் கொண்டே நடந்தாள். அங்கிருந்த முக்காலியில் ஒரு சிறிய போத்தல் இருப்பதைப் பார்த்தாள். இதற்குமுன் அது அங்கிருந்ததாக அவளுக்கு நினைவில்லை. ஆலிஸ் அந்த போத்தலை எடுத்துப் பார்த்தாள். அதன்மேல் "என்னைக் குடி" என்று எழுதப்பட்டிருந்தது.

ஆலிஸ் அந்தப் போத்தலில் உள்ளதைக் குடிக்கத் தயங்கினாள். சிறு குழந்தைகள் சட்டென்று போத்தலில் உள்ள எதையும் குடித்துவிடக் கூடாது. அது விஷமாகக்கூட இருக்கலாம் அல்லவா?

அந்தப் போத்தலில் விஷம் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை ஆலிஸ் யோசித்தாள். போத்தலில் உள்ளதை நாக்கால் நக்கிப் பார்த்தாள். அது செர்ரிப்பழம் சுவையில் இருந்தது. ஆலிஸ் அந்தப் பாட்டிலில் இருந்த எல்லாவற்றையும் "டக்"கென்று குடித்துவிட்டாள்.

அந்தப் போத்தலில் உள்ளதைக் குடித்ததனால் ஆலிஸ் குள்ளமாக மாறிக் கொண்டிருந்தாள். அவளது உயரம் ஒரு அடியாக மாறிவிட்டது. இப்போது சிறிய வாசல் வழியாக வெளியே பூந்தோட்டத்திற்கு போய்விடலாம் என்று நினைக்கும்போதே அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது. இன்னும் சிறிய உருவமாக மாறி விடுவோமா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அவள் சிறிது நேரம் காத்திருந்தாள். ஒரு மெழுகுவர்த்தி அளவிற்கு தான் சிறியவளாகி விடுவோமோ என்று நினைத்தாள். ஆனால், அவள் உயரம் குறைவது நின்றுவிட்டது.

அவள் பூந்தோட்டத்திற்குச் செல்ல நினைத்தாள். அந்தச் சிறிய கதவைத் திறப்பதற்கான சாவி முக்காலியின் மேல் இருந்தது. அதை எடுத்துக் கொள்வதற்கு முதலில் மறந்துவிட்டாள்.


ஆலிஸ் முக்காலியின் அருகில் வந்தாள். முக்காலி அவளைவிட மிக உயரமாக இருந்தது. கீழேயிருந்து பார்க்கும்போது கண்ணாடி முக்காலி வழியாக சாவி தெரிந்தது. ஆலிஸ் முக்காலியின் ஒரு காலைப் பிடித்து மேலேற முயன்றாள். ஆனால், வழுக்கிக் கீழே விழுந்தாள். அவளால் முக்காலியில் ஏறி சாவியை எடுக்க முடியவில்லை.

ஆலிஸக்குத் தன்னை நினைத்து அழுகை வந்தது. ஆனால் அழுவதால் என்ன பயன்? அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். சற்று தொலைவில் ஒரு டப்பா கிடந்தது. அதைத் திறந்தபோது குட்டியான அளவில் "கேக்" துண்டுகள் இருந்தன. "என்னைச் சாப்பிடு" என்று அதில் எழுதப்பட்டிருந்தது. அந்த "கேக்"கை சாப்பிட்டாள், தான் வளரக்கூடும் என்று ஆலிஸ் நினைத்தாள். ஒருவேளை தான் இன்னும் குள்ளமாகிவிட்டால், என்ன செய்வது? என்ற பயமும் அவளுக்குத் தோன்றியது.

கொஞ்சம் "கேக்"கை அவள் வாயில் போட்டாள். தன்னைப் பார்த்தாள். ஒன்றும் நடக்கவில்லை. என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று கருதி அவள் கேக் முழுவதையும் சாப்பிட்டுவிட்டாள்.

(தொடரும்...)





# நிகழ்வுகளின் பதிவுகள்....

நெல்லியடி கொமர்ஷல் வங்கி நடாத்திய 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ். பி. ரஜீவன் உரையாற்றுவதையும் கௌரவிக்கப்பட்டமாணவர்கள் சக வங்கி உத்தியோகத்தர்கள் விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். (01)





சமரபாகு கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் சீனா உதயகுமார் எழுதிய "சித்திரா ரீச்சர்'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றபோது... (116)




யாழ். இந்து மகளிர் கல்லூரி தமிழ்த்தினப்போட்டியில் தனிஇசை, தனிநடனம், திறனாய்வு ஆகிய போட்டிகளில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றது இதில் வெற்றி பெற்ற மாணவிகளுடன் அதிபர், ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதைக் காணலாம். (48)



சம்பத்வங்கியின் சாவகச்சேரி கிளையின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பிரதேச சபை பொது நூலகத்திற்கு சிறுவர் பூங்கா புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் வங்கியினால் திறந்து வைக்கப்பட்ட போது... (11)





அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் புதி நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் அமைச்சர் சிலையை திறந்துவைப்பதையும் காணலாம். (18).



யாழ். இந்துக்கல்லூரியின் இந்து இளைஞர் பவளவிழா மலர் வெளியீட்டுநிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரியில் நடைபெற்றபோது வைத்திய கலாநிதி பேரானந்தராசா நூலை வெளியிட்டு வைப்பதைக் காணலாம். (10)



யாழ். போதனாவைத்தியசாலையின் நீரிழிவு பிரிவினரின் மருத்துவ பரிசோதனை கடந்த வாரம் யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்றபோது

# சிறகுவலைத் தொழிலாளர்களின் பிரச்சினை நிறைவேறின தீர்மானங்கள்

யாழ்.மாவட்டத்தில் சிறகு வலைத் தொழிலில் ஈடுபடும் கடற்றொழில் கிராமிய அமைப்பு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் சிறகு வலைத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சில முக்கியமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சிறகு வலைத்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பான கூட்டம் அண்மையில் கடற்றொழில் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறகு வலைத்தொழில் ஈடுபடும் கிராமிய கடற்றொழிலில் அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப் பட்டன.

யாழ்.கடல்நீரேரி பகுதியில் இறால் பிடிக்க பெரும்பாலும் கூடு முறை பயன்படுகின்றது. இக்கூடுகளில் சிறிய இறால்கள், சிறிய மீன்கள் அகப்பட்டு பாரியளவில் அழிவடைகின்றன. இதனால் யாழ்.மாவட்டப் பகுதியில் கூடு பாவித்து கடற்றொழில் மேற்கொள்ளல் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும்.

இறால், மீன்கள் பிடிக்க பாவிக்கப்படும் சிறிய இழுவைமடிவலைகள் மிக வசதி குறைந்த மீனவர்கள் பயன்படுத்துகின்றனர். இம்மடியில் இரும்புச் சங்கிலி, ஈயக்குண்டுகள் பாவிப்பதால் கடலின் அடித்தளப்படுக்கை வருடப்பட்டு அதன் இயற்கை அமைப்பு அழிவடையும். அத்துடன் அடித்தளத்தில் வாழும் உயிரினங்களும் பாதிப்படையும். இதனைக் கருத்திற்கொண்டு இழுவை மடியில் பாரம் போட்டு (ஈயம், கல், சங்கிலி) இழுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆழம் குறைந்த (பரவை கடல்) கடற்பகுதியில் செய்யப்படுகின்ற எந்தவொரு மீன்பிடி முறைக்கும் ஈயம் போன்ற பாரம் கட்டி தொழில் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

யாழ்.கடல் நீரேரி பிரதேசத்தில் சிறகுவலைகள் அதிகரித்துள்ளதால் அவற்றை மட்டுப்படுத்தி ஏனையோருக்கும் சந்தர்ப்பம் வழங்கும் முகமாக 15 முழப்பாட்டுக்கு மேல் சிறகுவலை பாய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. கரையிலிருந்து 3 அடுக்கு வலைக்கு மேல் பாயமுடியாது. நிலவலை வரையறை 750 கண் நீளமுள்ள 5 வலைகள் மட்டும் பாயலாம் அகலப்பாடு ஒரு குடும்பத்துக்கு 2 பாடுகள் மட்டும் பாயலாம் என தீர்மானிக்கப்பட்டது.

சிறகு வலை இறால் கண்டி ஒரு குடும்பத்துக்கு 4 கூட்டம் மட்டும் பாவிக்கலாம். நிலவலை 4 பீஸ் மட்டும் பாயலாம்.

ஆறுகள் நீரோட்ட வாய்க்கல்களினால் வற்றுப்பெருக்கு நேரங்களில் மீன்கள் ஓட்டம் இருப்பதால் அவற்றை தனிநபர் மட்டும் பயன்பெறும் வகையில் ஆறுகள் நீரோட்ட வாய்க்கால்களுக்கு தடையாக வலை பாய முடியாது

கணவாய் பிடிப்பதற்காக பாரிய குழைகொப்புகள் பாவிப்பது ஏனைய வழிச்சல் வலைத தொழிலாளர்களது வலைகள் சேதமடைய ஏதுவாக இருப்பதனாலும் ஏனைய தொழில் முறைகளுக்கு இடைஞ்சலாக அமைவதாலும் கணவாய் பிடிக்க குழைகள் பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் இத்தீர்மானங்கள் சபையினால் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டன. (பா)

# மருதனார்மடம் சந்தையில் இப்போது இடநெருக்கடி

(யாழ்ப்பாணம்)

மருதனார் மடச்சந்தைக்குள் தற்பொழுது தினமும் காலை வேளைகளில் ஏற்பட்டுவரும் இட நெருக்கடியினால் சந்தை வியாபாரிகள் ஏனைய இடங்களில் இருந்து பொருட்கள் வாங்கவரும் வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மருதனார் மடம் சந்தைக்குள் புதிய கட்டடப்பணிகள் இடம்பெற்றுவருவதனாலும் உடுவில் பிரதேசசபை உப அலுவலக கட்டடப்பணிகள் நடைபெற்று வருவதாலும் சந்தைக்குள் வியாபாரிகளுக்கு தற்காலிககொட்டகைகள் அமைக்கப்பட்டு இருப்பதாலும்

உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் சந்தைக்குள் வாகனங்களைக் கொண்டுவந்து விடுவதாலும் காலை வேளையில் பெரும் இடநெரிசல்ஏற்படுவதுடன வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் சந்தையின் முன்புறமான காங்கேசன்துறை வீதியில் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் வாகனங்கள் நிறுத்தப்படுவதாலும் பொதுமக்களின் போக்குவரத்துக்கும் பெரும் நெருக்கடி நிலை காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரியவிடயத்தில் கவனம் எடுப்பதன் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (66)




வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன்.எஸ். செந்தில்லிங்கத்தின் சேவைகளைப்பாராட்டி வடமராட்சி லயன்ஸ் கழக விழாவிலே சர்வதேச லயன்ஸ்கழக 306 பி.1இன் இரண்டாவது உப ஆளுநர் லயன் டாக்டர் வி.தியாகராஜா பொன்னாடைபோர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம். (01)

# ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான திருமுறை மனனப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம்ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகத்தினால் ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட திருமுற்றைமன்னப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு

தரம் 03

த.கேதகி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), கு.வைஷ்ணவி (காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்), சி.நிரோசினி (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

சிறப்புப்பரிசு பெறுவோர்

கி.ஆர்த்திகா, சி.விதுர்சன் (யா/காரைநகர் கிழவன் காடு கலாமன்றம்), க.இலக்கியா (யா/ஆனைப் பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), க.கஜேந்தினி, பா.டர்னிகன் (யா/காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்).

தரம் 04

வ.ஆர்த்திகா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சி.யஸ்வந்திகா, நா.காருண்யா (யா/யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை).

சிறப்புப் பரிசு பெறுவோர்

ர.கிஷாந்த், கா.சஞ்ஜெய் (தலையாழி ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை), த.தனுசா, காரைநகா கிழவன்காடு கலா மன்றம்), கு.ஜினோத் (யா/வண்ணை, நாவலர் மகா வித்தியாலயம், ப.சானுகா (யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) (முற்றும்)

# தொழில்வாய்ப்பும் பரீட்சைகளும்

## மருந்துக் கலவையாளர்கள் (Dispenser)

இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையில் மருந்துக் கலவை உத்தியோகத்தர் பதவிகளுக்காக திறந்த அடிப்படையிலான பயிற்சிநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக சுகாதார அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலம்,கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஏதாவது ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சை விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் பாடம் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எதிர்பார்க்கப்படும் தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு அதில் கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 08 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம் 6), சுகாதார அமைச்சு, சுவசிறிபாய, இல.385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மருந்துக் கலவையாளர் உத்தியோகத்தர் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளல் - 2014' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## உதவி முகாமையாளர்கள் அலுவலக உதவியாளர்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இலங்கை மாநாட்டு பணியகத்தின் உதவி முகாமையாளரகள், அலுவலக உதவியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக இலங்கைப் பிரஜைக்ளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளன.

**உதவி முகாமையாளர்கள் :** விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டாரிகளாக இருத்தல் வேண்டும். சந்தைப்படுத்தல் அல்லது செயற்றிட்ட முகாமைத்துவம் அல்லது சுற்றுலாத்துறை முகாமைத்துவம் ஆகியவற்றில் பெறப்பட்ட பட்டமாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**அலுவலக உதவியாளர்கள் :**

விண்ணப்பதாரிகள் க.பொ. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், இலங்கை மாநாட்டு பணியகம், 4 ஆம் மாடி, ஹோட்டல் பாடசாலைக் கட்டடம், 78, காலி வீதி, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## முகாமைத்துவ உதவியாளர்கள் ஆய்வுகூட உதவியாளர்கள்

சுற்றாடல் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் கீழ் இரத்தினக் கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் முகாமைத்துவ உதவியாளர்கள், ஆய்வுகூட உதவியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக தகுதிவாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளன.

**முகாமைத்துவ உதவியாளர்கள் :** விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்,ஆங்கிலம், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பொது வினாத்தாள் நீங்கலாக ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஆய்வுகூட உதவியாளர்கள் :** விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 08 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இல.382, டில்கோ கோர்ட் கட்டடம், புதிய கண்டி வீதி, மாலபே. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ண்ப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேற்படி இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

தொகுப்பு:-
C.N.H சாள்ஸ்

# ஆடிவேல் விழா

மாத்தளை நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா எதிர்வரும் 8 ஆம் திகதி காப்புக் கட்டுதலுடன் ஆரம்பமாகவிருக்கிறது.

அன்று முதல் தினசரி காலை 9.30 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் பகல் அடியார்களுக்கு அன்னதானமும் மாலை 7 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும்.

10 ஆம் திகதி காலை 7.30 மணிக்குஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இருந்து பால்குடபவனியும் மாலை 5 மணிக்கு சாயரட்சை பூசையைத் தொடர்ந்து வள்ளி தேவசமேத ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமான் வள்ளி தேர் பவனி இடம்பெறும். (10)

# நூல் வெளியீட்டு விழா

திருகோணமலை நலன்புரிச் சங்க ஆதரவில் திருக்கோணேஸ்வரம் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இசுகாபேரே சத்தியசாயிபாபா நடுவம் டொரன்ரோவில் இடம்பெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் க.அருள் சுப்பிரமணியம் நூல் அறிமுகவுரையை நிகழ்த்தவுள்ளார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் முனைவர் நா.சுப்பிரமணிய ஐயர் நூல் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளனர். (10)

# இதழியல் விருதுகள் இம்முறை ஐவருக்கு

15 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வழங்கும் வருடாந்த இதழியல் விருதுகள் இம்முறை ஐந்து சிரேஷ்ட பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

40 வருட காலத்துக்கும் மேலாக பத்திரிகைத் துறைக்கு அர்ப்பணிப்புடன் கூடிய தொழில்முறைத் திறன் மிக்க சேவை வழங்கிய இவ்வருடத்துக்கான வாழ்நாள் சாதனையாளர விருது பெற்ற ஐவரும் வருமாறு,

திருமதி ஆன் அபயசேகரா, பந்து எஸ்.கொடிகார, அஜந்தா ரணசிங்க, இராசையா செல்வராசா, சொலமன் ரணசிங்க (10)



# பரமர் சங்கமம்

‘அற்பனுக்கு மவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்’ எண்ட பழமொழி எவ்வளவு பொருத்தமாகச் சொல்லப்பட்டுள்ளதென்பதை எங்கட யாழ்ப்பாண ஆசுப்பத்திரி பாதுகாப்புப் பணியாளர்களைப் பாத்தால் விளங்கும்.

படிச்சுப்போட்டு வேலையில்லாமல் இருக்கிற பட்டதாரிகளும் பாதுகாப்பு வேலையிலை சேந்திருக்கினமோ என்னவோ? பட்டதாரியளுக்கும் உகந்த வேலைகள் எங்கையிருக்கு.

படிச்சிட்டு வீட்டுக்கும் றோட்டுக்கும் பாரமாக இருந்து தண்டச்சோறு திண்டபொடியளைக் காப்பாற்றி இருக்கிறே இந்தப் பாதுகாப்பு வேலைதான் பாதுகாப்பு உத்தியோகத்தரெண்டால் கொம்பனி முதலாளியையும் சோதிச்சுவிடும் பவறிருக்கெண்டாப்போல ஆசுப்பத்திரியிலும் அப்புடி நடக்கேலுமோ?

போனமாசம் 28 ஆம் திகதி கிளினிக்குப் போனாப் போல வெளிநோயாளர் பிரிவேம் கிளினிக்கேம் இணைக்கும் நடைபாதையால் சிற்றுண்டிச் சாலைக்குப் போட்டுத் திரும்பிக் கொண்டிருந்தன்.

ஒரு பாதுகாப்பாளி நாலைந்து பெரிய சொப்பிங் பொதிகளை ரெண்டு கைகளிலும் கஷ்டப்பட்டுத் தூக்கிக் கொண்டு உனக்கு மூன்று நாலு தடவை சொல்லிப் போட்டன் கேக்கிறாயில்லை என்று அரற்றியவாறு வந்தார்.

பொதிகளில் டிப்பிடிப்பி கச்சான் கடலை விசுக்கோத்து மிக்ஷர் பைக்செய்யப்பட்ட சிறு பொதிகள் காணப்பட்டன அண்ணே அண்ணே தாண்ணே.... நான் போறன் எண்டு கொண்டு இளம்பெண்ணொருத்தி அவரைக் கலைச்சுக் கொண்டு போனாள்.

பின்பாக நான் மருந்தெடுக்க இருக்கையில் அந்தப் பெண் வெறும் கையுடன் வந்ததைக் கண்டிட்டுக் கேட்டன் சாமான் தரெல்லையோ எண்டு தலைவரிட்டைக் கதைச்சுத் கிதைச்சு தந்திட்டேண்டாள் பிறகு அவங்களுக்குப் பொம்பிளையோடை சேட்டை விடுறே தான் பொழுது போக்கெண்டும் சொன்னாள்.

முன்பும் அவளைக் கண்டிருக்கிறன் கச்சான் கடலை விக்கேக்கை மிரண்டு மிரண்டு பாத்துப் பாத்து பொதிகளை ஒளிச்சு வைச்சு வியாபாரம் செய்வாள் அவள் சுகாதார முறைப்படி பொதிகளில் அடைக்கப்பட்ட பொருட்களையே விற்பனை செய்வாள் அவளது வாழ்க்கைக் கஷ்டம் என்னவாக இருக்குமெண்டு நாமறியமாட்டோம்.

கஷ்டத்தின் நிமித்தந்தானே அவள் இப்புடி ஒரு தொழிலைச் செய்கிறாள் களவிலோ, துர்நடத்தையிலோ ஈடுபடவில்லையே இங்க பெரியாக்களிடம் கேட்டுத்தானா வியாபாரம் செய்யுறாய் எண்டு கேட்டன்.

டாக்குத்தர் மிஸ்ஸி வேறொருவருமே ஒண்டுஞ்சொல்லுறேல்லை. இவங்கதான் பொம்பிளையோட சேட்டை விடுறாங்கள் அவங்கட பேரேஞ்சொல்லவா எண்டாள்.

யாழ்ப்பண ஆசுப்பத்திரி மட்டத்தில் பாதுகாப்புப் போடப்பட்ட பின்னால பல ஒழுங்கீனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதை மறுக்கேலாது எண்டாலும் ஏழை பரதேசியள் நேர்மையாக ரெண்டு காசுழைக்கச் செய்யும் தொழிலைக் கெடுக்கலாமா?

அந்தப் பதவிக்கு வரமுன்னால் இருந்த நிலையை மறந்தால் அற்பனுக்கு பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பானெண்டுதானே எண்ணத் தோன்றும். இல்லையே சொல்லுங்க பாப்பம்....

# மனித உரிமைகள் பேணல்

# அரசு மீது இராஜதந்திர அழுத்தம்

(கொழும்பு)

**இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.**



பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்டுள்ள மனித உரிமைகள் அறிக்கையின் பிந்திய தகவல்களில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து ஜூன் வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு பிரித்தானியா அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் மற்றும் சிங்களவர்களுக்கு மத்தியில் நாட்டின் தென்பகுதியில் வன்முறைகள் இடம்பெற்றன. இதன்போது பெரும்பாலும் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

பௌத்த பிக்குகளும் இணைந்திருந்த இந்த வன்முறையின் போது மூன்று உயிர்களும் காவுக்கொள்ளப்பட்டன.

இரவு வேளைகளில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருந்த போதிலும் வன்முறைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

இதன்போது சட்டம் முழுமையாக செயலிழந்துவிட்டதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தமையையும் பிரித்தானிய அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் தாக்குதல் அச்சங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு அரசாங்க அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனர்.

இலங்கையில் பேச்சு சுதந்திரம் தொடர்ந்தும் மீறப்பட்டு கொண்டிருக்கிறது. மாணவர்களின் போராட்டங்கள் அடக்கப்படுகின்றன.

கடந்த மே 16ஆம் திகதியன்று போராட்டம் ஒன்றில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது நான்கு பேர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஏப்ரல் 14 ஆம் திகதியன்று யாழ்ப்பாண செய்தியாளர் ஒருவர் தாக்கப்பட்டார். இதனையடுத்து அரசாங்க அதிகாரி ஒருவரின் மனைவியின் புகைப்படத்தை பிரசுரித்தமைக்காக செய்தித்தாளின் ஆசிரியர் ஒருவர் விசாரணை செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண செய்தியாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று அதிகாரிகளின் தலையீட்டினால் இரத்துச் செய்யப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையத்துக்கு கண்காணிப்பு பணிகளுக்காக சென்ற போது அச்சுறுத்தப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சிறையில்தமிழக மீனவர்கள் மீட்கும் போராட்டம் இரத்து

(சென்னை)

மத்திய அமைச்சர் பொன் இராதாகிருஷ்ணனின் கோரிக்கைக்கு அமைய தஞ்சமடையும் போராட்டத்தைக் கைவிட்டனர் தமிழக மீனவர்கள்.

இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் தமது குடும்பங்களுடன் கச்சதீவில் சரணடைவது என்று தீர்மானித்திருந்தனர்.

இதன்படி நேற்று முன்தினம் காலை அவர்கள் இராமேஸ் வரம் துறைமுகத்திற்கு ஊர்வலமாக சென்று அங்கிருந்து கச்சதீவுக்குப் படகுகளில் செல்ல ஆயத்தமாகினர். இதன்போது தொலைபேசியில் மீனவர் சங்கப் பிரதிநிதிகளைத் தொடர்புகொண்ட மத்திய இணை அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன், பத்து நாட்களுக்குள் மீனவர் பிரச்சினை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜுடன் பேசி உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் அத்துடன் மீனவர்களது பிரச்சினை தொடர்பில் நிரந்தரத் தீர்வு எட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, போராட்டத்தைக் கைவிடுங்கள் என்று கோரிக்கை விடுத்தார்.

அமைச்சரின் தொலைபேசி மூலமான கோரிக்கை அங்கு திரண்டிருந்த மீனவர்களுக்கு ஒலிபெருக்கி மூலம் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது.

கோரிக் கைகளை ஏற்றுக் கொண்ட மீனவர்கள் பத்து நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படுமாயின் நாம் இந்தப் போராட்டத்தைக் கைவிடுகின்றோம் என்றும் உரிய தீர்வு பெற்றுத் தரப்படாவிட்டால் முழு அளவில் போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்தனர்.

இதேவேளை புதுக்கோட்டை மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் நடத்தி வந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை கைவிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிகாரங்களை பரவலாக்குங்கள் அரசிடம் கோருகிறார் சம்பந்தன்

பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் மாவட்டங்களுக்கான அதிகாரங்களையும் அரசாங்கம் பரவலாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கலந்துரையாடல் ஒன்றில் சம்பந்தன் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நிதி, போக்குவரத்து, காடுகள், துறைமுகம், விமான சேவைகள் உட்பட 41 அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற யோசனைகளை கூட்டமைப்பு முன்வைத்துள்ளது.

இதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைக் கோரியதாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தமிழ்த் தேசிய பேரவை என்ற அமைப்பை ஆரம்பிக்கவும் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. இதனிடையே பாதுகாப்பு அதிகாரங்களைத் தவிர ஏனைய அதிகாரங்களை வடக்கு மாகாணத்திற்கு பகிருமாறு இந்திய அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்திடம் கூறியுள்ளதாகவும் திவயின தெரிவித்துள்ளது.

# சுகாதாரமற்ற உணவுகள் களஞ்சியசாலைக்கு சீல்

(கொழும்பு)

இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சீதுவை விநியோக நிலையத்திலுள்ள களஞ்சியத்திற்கு பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று சீல் வைத்துள்ளனர்.

உணவு வகைகள் சுகாதாரமற்ற முறையில் பொதியிடப்பட்டிருந்தமையே இந்த நடவடிக்கைக்கு காரணம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

சீல் வைக்கப்பட்ட போது குறித்த களஞ்சியத்தில் சுமார் ஒரு இலட்சம் கிலோகிராம் பச்சை அரிசியும், 30 ஆயிரம் கிலோகிராம் கீரிச் சம்பா அரிசியும், 35 ஆயிரம் கிலோகிராம் பாஸ்மதி அரிசியும், 24 ஆயிரம் கிலோகிராம் சிவப்புச் சீனியும் இருந்தாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சீதுவை விநியோக களஞ்சியசாலை முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் எதிர்வரும் செவ்வாய்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## கர்நாடக சங்கீதம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. காதால் கேட்டு இன்பம் பெறக்கூடிய கலை
   1) நடனம் 2) சிற்பம் 3) சங்கீதம் 4) ஓவியம்

2. சுருதியில் குறைந்த ஸ்வரங்கள்
   1) தீவிர ஸ்வரங்கள் 2) கோமள ஸ்வரங்கள்
   3) விக்குருதி ஸ்வரங்கள் 4) பிரக்ருதி ஸ்வரங்கள்

3. பண்டைத் தமிழிசையில் சுத்தமேளம் என அழைக்கப்படும் இராகம்
   1) கல்யாணி 2) ஆரபி
   3) மாகாமாளவகௌளை 4) ஹரிகாம்போதி

4. அப்பியாச வரிசைகளுள் மாணவர் முதன்முதல் சாகித்தியமாகக் கற்கும் உருப்படி
   1) கீதம் 2) கீர்த்தனை 3) இராகமாலிகை 4) பதம்

5. ஸட்ஜம். சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதி மத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஹாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களை எடுத்துக் கொள்ளும் இராகம்.
   1) கல்யாணி 2) மோகனம் 3) பந்துவராளி 4) சங்கராபரணம்

6. பியந்தைக் காந்தாரம் என்னும் பண்ணின் இராகம்
   1) நவரோஜ் 2) கம்பீரநாட்டை 3) மோகனம் 4) மத்தியமாவதி

7. மெட்டுக்கள் உள்ள வாத்தியம், த்ாளத்தந்திகள் உள்ள வாத்தியம், நெளிபோட்டு வாசிக்கப்படும் வாத்தியம் மேற்கூறிய சிறப்பம்சங்களைக் கொண்ட வாத்தியம்.
   1) தவில் 2) வயலின் 3) தம்புரா 4) வீணை

8. 16 அட்சரங்களை எடுத்துக்கொள்ளும் தாளம்
   1) கண்டஜாதி அடதாளம் 2) சங்கீர்ணஜாதி துருவதாளம்
   3) மிஸ்ரஜாதி மட்டியதாளம் 4) சங்கீர்ணஜாதி ரூபகதாளம்

9. எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாக வரும் இராகம்.
   1) கல்யாணி 2) தோடி
   3) ஆரபி 4) மோகனம்

10. சங்கீத பிதாமகர் என அழைக்கப்படும். வாக்கேயகாரர்
   1) முத்துஸ்வாமி தீட்சிதர் 2) புரந்தரதாஸர்
   3) பாபநாச சிவம் 4) தியாகராஜ சுவாமிகள்

11. அக்னி - கோ என அழைக்கப்படும் இராகம்
   1) சக்கரவாகம் 2) கல்யாணி
   3) மாயாமாளவகௌளை 4) மோகனம்

12. காபாலி என்னும் சௌக்ககாலக் கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
   1) கல்யாணி 2) பிலஹரி
   3) ஹம்ஸத்வனி 4) மோகனம்

13. விவாதி தோஷமற்ற மேள இராகங்களின் எண்ணிக்கை
   1) 28 2) 52 3) 40 4) 32

14. பாஹாங்கமாக அமைந்த இராகம்
   1) பிலஹரி 2) ஆரபி 3) பிலஹரி 4) மோகனம்

15. "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்ற உருப்படி
   1) வர்ணம் 2) பதம் 3) இராகமாலிகை 4) கீதம்

16. இராஜவாத்தியம் எனச் சிறப்புப் பெயர் பெறும் வாத்தியம்
   1) வீணை 2) வயலின் 3) புல்லாங்குழல் 4) தம்புரா

17. நாட்டுப் பாடல்கள் பாடப்படும் இராகம்
   1) மோகனம் 2) பந்துவராளி 3) புன்னாகவராளி 4) ஹம்ஸத்வனி

18. பின்வரும் ஸ்வரங்களில் விவாதி ஸ்வரமானது
   1) ஸட்ஜம் 2) சதுஸ்ருதி ரிஷபம்
   3) ஷட்சுருதி ரிஷபம் 4) சாதாரண காந்தாரம்

19. "அன்பேதான்" என்னும் கீதத்தை இயற்றியவர்
   1) பொன் ஸ்ரீவாமதேவன் 2) வேங்கடமகி
   3) பரிமளரங்கர் 4) திலகநாயகம் போல்

20. பரிவார சுருதிகள் ஒலிக்கும் வாத்தியம்
   1) வீணை 2) வயலின்
   3) புல்லாங்குழல் 4) நாதஸ்வரம்

**கீழே தரப்பட்டுள்ள ஸ்வரக் கோர்வையை அடிப்படையாகக் கொண்டு 21 - 23 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

ஸரிகமபாமக / ஸ்நீத / பமகரி //
ஸரிரிககமமப / மபதநி / ஸ்ரிஸா /

21. இந்த ஸ்வரப் பிரயோகத்தில் இடம்பெறும் ஜண்டைப் பிரயோகம்
   1) ஸரிரிககமமப 2) பமகரி 3) ஸ்நீத 4) மபதநி

22. மேலே தரப்பட்டுள்ள ஸ்வரக் கோர்வையில் ஒரு ஆவர்த்தனம் எடுத்துக்கொள்ளும் மொத்த அட்சரங்கள்
   1) 10 2) 20 3) 16 4) 32

23. மேலே தரப்பட்டுள்ள ஸ்வரக் கோர்வையிலுள்ள குறில் ஸ்வரங்களின எண்ணிக்கை
   1) 24 2) 26 3) 28 4) 30

24. "கஞ்சதளாயதாஷி" என்னும் கமலமனோகரி இராகக் கிருதியை இயற்றிய வாக்கேயகாரர்
   1) அருணாசலக் கவிராயர் 2) சியாமா சாஸ்திரிகள்
   3) முத்துத்தாண்டவர் 4) முத்துஸ்வாமி தீட்ஷிதர்

25. தாளம் தொடங்குமுன் பாட்டு ஆரம்பித்தல்
   1) கிரகம் 2) சமஎடுப்பு 3) அதீதஎடுப்பு 4) அநாகத எடுப்பு

26. // இவ் அடையாளம் குறிப்பிடுவது
   1) அன்னியஸ்வரக் குறியீடு 2) ஆவர்த்தன முடிவு
   3) அங்கமுடிவு 4) இவை மூன்றும் அல்ல

27. வயலின் வாத்தியத்தை கர்நாடக இசை உலகிற்கு அறிமுகம் செய்தவர்
   1) லால்குடி ஜெயராமன்
   2) தியாகராஜ சுவாமிகள்
   3) பாலஸ்வாமி தீட்சிதர்
   4) முத்துத்தாண்டவர்

28. ப்ரஹ்மசக்கரத்தில் வரும் ரிஷபமும் காந்தாரமும்
   1) சுத்தரிஷபம் சாதாரண காந்தாரம்
   2) சுத்தரிஷபம் சுத்த காந்தாரம்
   3) சதுஸ்ருதி ரிஷபம் சாதாரணகாந்தாரம்
   4) சுத்தரிஷபம் அந்தரகாந்தாரம்

29. தாது ஆடுவதற்கு மாது அபிநயம் பிடிப்பதற்குமான உருப்படி வகை
   1) வர்ணம் 2) ஜதீஸ்வரம் 3) தில்லானா 4) பதம்

30. திரியாங்கங்களையும் கொண்டதாளம்
   1) ஏகதாளம் 2) ரூபகதாளம்
   3) திரிபுடைதாளம் 4) ஜம்பைதாளம்

31. துரித லயம் குறிப்பது
   1) 1ஆம் காலம் 2) 2ஆம் காலம்
   3) 3ஆம் காலம் 4) 4ஆம் காலம்

32. தேவாரப் பதிகங்கள் பாடப்பட்ட காலப்பகுதி
   1) சோழர்காலம் 2) பல்லவகாலம்
   3) சங்ககாலம் 4) 20 ஆம் நூற்றாண்டு

33. மிருதங்கத்தில் வலந்தலையில் உள்ள கடுமையான பகுதி
   1) மீட்டுத்தோல் 2) கொட்டு
   3) வார் 4) மார்ச்சனை

34. சங்கீத சுதாகரம் என்னும் நூலை எழுதியவர்
   1) ஹரிபாலர் 2) வேங்கடமகி
   3) தாளப்பாக்கம் சின்னையா 4) பரிமளரங்க

35. அப்பியாச வரிசைகள் பாடப்படும் இராகம்
   1) மோகனம் 2) கல்யாணி
   3) பிலஹரி 4) மாயாமாளவகௌளை

36. A தாளத்தின் உட்பிரிவு லயம் ஆகும்.
   B ஒரு அட்சரத்திற்கு 5 எண்ணிக்கையைக் கொண்டது கண்ட நடை ஆகும.
   C ஏழுமலைமேல் எனும் கீதம் கண்ட நடையாகும்.
   D கண்டநடையின் ஜதி தக தகிட என்பதாகும்.
   மேற்கூறிய கூற்றுக்களுள் சரியானவை.
   1) ACD 2) BCA 3) ABD 4) CBD

37. "கபாலி" என்னும் மோகன இராக உருப்படி
   1) கீர்த்தனை 2) பதம்
   3) இராகமாலிகை 4) சௌக்ககாலக் கீர்த்தனை

38. சீர்காழி மூவர் எனச் சிறப்புப் பெயர் பெற்றவர்களில் ஒருவர்
   1) புரந்தரதாசர் 2) தாண்டவர்
   3) திருஞானசம்பந்தர் 4) தியாகராஜர்

39. திஸ்ரஜாதியையும் சதுஸ்ரஜாதியையும் கூட்டினால் வரும் ஜாதி
   1) கண்டஜாதி 2) மிஸ்ரஜாதி
   3) சங்கீதஜாதி 4) திஸ்ரஜாதி

40. பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியல் கல்வி புகுத்தப்பட்ட ஆண்டு
   1) 1971 2) 1972
   3) 1973 4) 1978

# கணினி பற்றிய அறிமுகம்

1) கணனி என்றால் என்ன?

தரவுகளை (data) ஏற்றுக்கொண்டு அத்தரவுகளை தொடராக பல்வேறுபட்ட செயன்முறைகளுக்கு உட்படுத்தி வெளியீடாக தகவலை உருவாக்கும் கருவியே கணனி ஆகும். இது ஒரு இலத்திரனியல் சாதனம் ஆகும்.

2) கணனி ஒன்றுக்கு இருக்கவேண்டிய இயல்புகளை பட்டியற்படுத்துக.

வேகம் (Speed), திருத்தம் (Accuracy), நம்பகத்தன்மை (Raliability), சேமிக்கும் தன்மை (Storage capability), குறைந்த செலவு (Reducecost), தொட்டுணர முடியாத அனுகூலங்கள் (Intragibie benetils)

3) தரவு, தகவல் என்றால் என்ன என்பதை விளக்கி அவற்றை வேறுபடுத்துக.

| தரவு | தகவல் |
|---|---|
| சூழலில் அல்ல நிறுவனத்தில் ஏற்படும் நிகழ்வுகள் பற்றிய விபரங்கள் | தரவுகளை பயன்படுத்துவதற்கு உகந்த முறையில் மாற்றுவது, |
| முறையாக ஒழுங்குபடுத்தப்படாமல் காணப்படும் | முறையாக ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கும் |
| குறித்தவொரு செயற்பாட்டுக்கான அடிப்படை விபரங்கள் | குறித்தவொரு தேவைக்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் |

செயற்பாடு ஒன்றின்போது வழங்கப்படும் உள்ளீடுகள் (inputs) தரவுகள எனப்படும். உதாரணமாக வரைபு ஒற்றை வரைவதற்கு வழங்கப்படும் x, y பெறுமானங்கள் இதற்குரிய தரவுகளாகும்.

தரவுகளைப் பயன்படுத்தி வெளியீடுகளை (Output) பெற்றுக் கொள்ளும்போது அவை தகவல்களாக இருக்கின்றன.

4) தரவு முறைவழியாக்கம் (Data Processing) என்றால் என்ன?

தரவுகளை பயனுறுதிமிக்க தகவல்களாக மாற்றுகின்ற செயற்பாடு ஆகும். தரவு முறைவழியாக்கத்தில் பின்வரும் தொழிற்பாடுகள் உள்ளடக்கப்படலாம்.

1. வகைப்படுத்தல்
2. ஒழுங்குபடுத்தல்
3. கணிப்பீடு
4. சாராம்சப்படுத்தல்

5) தரவு செய்முறைப்படுத்தலை ஒரு உதாரணத்துடன் எளிய விளக்கப் படத்தில் காட்டுக.

| தரவு | செயன்முறை | தகவல் |
|---|---|---|
| உள்ளீடு | செய்முறை | வெளியீடு |
| ↓ | ↓ | ↓ |
| ஊழியரின் வேலை | ஊழியரின் வருமானக் கணிப்பு | ஊழியரின் சம்பளம் (1 மணித்தியாலத்திற்கு ரூ.50) |

| | | |
|---|---|---|
| A. 8 மணி | 8x50/= | 400/= |
| B. 6 மணி | 6 x50/= | 300/= |

6) தகவலானது கொண்டிருக்க வேண்டிய இயல்புகளைத் தருக.

1. முழுமையானது (Completeness)
2. பிழையற்றுத் திருத்தமானதாக இருத்தல் (Accuracy)
3. விளக்கமானதாகவும், தெளிவானதாகவும், எளிமையானதாகவும் இருத்தல் (Understandability)
4. தேவையான நேரத்தில் கிடைக்கக்கூடியதாக இருத்தல் (Timeliness)
5. வரையறை (Breadth)
6. உற்பத்தி (Origin - தகவல் எங்கிருந்து பெறப்படுகிறது என்பதைக் குறிக்கிறது. நிறுவனத்திற்கு உள்ளிருந்தா? அல்லது வெளியாக வளங்களிலிருந்தா? என்பதாகும்
7. அதிர்வெண் (Frequency - தகவலானது எவ்வளவு காலத்தில் தேவைப்படுகிறது. சேகரிக்கப்படுகிறது என்பதன் அளவையாகும்)
8. மாதிரி

7) கணனியில் தகவல்கள் எவ்வாறு சேமிக்கப்படுகின்றன?

Binary முறையில்

8) கணனிக்குச் சீராக மின்னோட்டத்தை வழங்குவது எனது

UPS - Uninterruptable Power Supply

9) கணனியில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தரவுகள் அல்லது தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படும் போது எவ்வகையான முறைமைகளின் கீழ் பரிமாற்றம் செய்யப்படுகின்றன?

Binary முறையில் இரண்டு வகை

1. ASCII 2. EBCDIC

10) முதலாவது கணனியை வடிவமைத்த நிறுவனம் யாது?

IBM

11) கணனி வன்பொருள் பாகங்களாக எவற்றைக் குறிப்பிடலாம்?

Input Devices, Ouput Devices, CPU, Storage, Communication Devices, Storage, Communications Device.

# தெரிந்துகொள்ளுங்கள்

**2012 ஆம் ஆண்டு**

- 2012 ஆம் ஆண்டு 2012 .01.21 இல் ஜனாதிபதியால் மும்மொழி இலங்கைக்கான ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டது.
- மும்மொழி இலங்கையொன்றுக்கான பத்தாண்டு வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**உலக நீர் தினம்**

- ஒவ்வொரு வருடமும் மார்ச் 22 இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- இவ் ஆண்டின் தொனிப்பொருள் நீர் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பதாகும்.
- 2025 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகையில் 40% மானோர் சுத்தமான குடிநீரின்றி காணப்படுவர் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

**சாரணிய நூற்றாண்டு**

- சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவல் பிரபு ஆவார்.
- 1907 இல் இங்கிலாந்தின் பிரவுன்ஸ் தீவில் பேடன் பவல் பிரபுவால் உலக சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1912 இல் பயிர்ச்செய்கையாளராக இருந்த பிரான்ஸில் ஜோர்ஜ் ஸ்டீவன் என்பவரால் இலங்கைக்கு சாரணியம் அறிமுகப் படுத்தப்பட்டது.
- முதலாவது சாரணத் துருப்பு மாத்தளை Christ church கல்லூரியில் உருவாக்கப்பட்டது.
- 2012 ஏப்ரலில் இலங்கை சாரணிய நூற்றாண்டு அனுஷ்டிக்கப்பட்டது.
- உலக சாரணர் தினம் பெப்ரவரி 22 இல் அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**

- நாட்டின் தொடர்பாடல் துறையில் முன்னோடியான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 2012 ஏப்ரலில் 30 வருடங்கள் நிறைவை கொண்டாடியுள்ளது.
- இக் கூட்டுத்தாபனம்1982 இல் உருவாக்கப்பட்டது.


**பூமி மணித்தியாலம்**

- உலக வனவிலங்கு நிதியத்தினால் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச தினமாகும்.
- இத்தினம் 2007 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய சிட்னி நகரில் 2.2 மில்லியன் வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் ஒரு மணி நேரம் மின்சார ஒளியை நிறுத்தி காலநிலை மாற்றத்திற்கு எதிராக அனுஷ்டித்ததன் மூலம் தொடங்கப்பட்டது.
- இவ் வருடத்திற்கான தினம் 2012 மார்ச் 31 இல் அனுஷ்டிக்கப்பட்டது.

**டெங்கு**

- வைரஸ் மூலம் உண்டாகும் ஒரு நோயாகும்.
- ஈ.டிஸ், ஈஜிப்ரி மற்றும் ஈடிஸ் அல்போபிக்ரஸ் எனப்படும் நுளம்புகள் கடிப்பதன் மூலம் இந்நோய் உண்டாகிறது.
- டெங்குக் காய்ச்சலைத் தடுக்க அதைப் பரப்பும் நுளம்புகள் உண்டாவதைத் தடுத்தல் வேண்டும். இந்நுளம்புகள் நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்களில் உண்டாவது குறிப்பிடத்தக்கது.
- இதற்கு எதிராக வக்சீன் இல்லை.
- இதற்கு குறித்த விஞ்ஞான சிகிச்சை இல்லை
- இதன் காரணமாக இறப்பவர்களின் எண்ணிக்கை புகையிலையை பயன்படுத்துவதன் விளைவாக இறப்பவர்களின் எண்ணிக்கையிலும் குறைவாகும்.
- இலங்கையில் தற்போது 12.336 டெங்கு நோயாளிகளும், 75 பேர் வரை மரணமடைந்தும் உள்ளனர்.





கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் 'மக்கள் மாமணி' அமரர் க.பொன்னம்பலம் அறக்கட்டளை நிதியத்தால் க.பொ.த. உ/த பரீட்சைக்கு தோற்றவிருக்கும் கலைப்பிரிவு மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு கடந்தவாரம் மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற போது கலந்துகொண்டவர்களையும் அன்னையின் திருவுருவப் படத்துக்கு மாகாண அமைச்சின் நலத்துறை செயலர் இ.இரவீந்திரன் சுடர் ஏற்றுவதையும் காணலாம். (112)

# மருத்துவ மனைகளுக்கு கிடைத்தது விசேட நிதி உதவி

லண்டனில் வாழும் நெடுந் தீவைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர் ஒருவர் தீவுப்பகுதி வைத்தியசாலைகள் சிலவற்றுக்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென ஒரு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியிருப்பதாக வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்.ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை தெரிவித்தார். தாம் வெளிநாட்டிற்கு பயணமாகி புலம்பெயர் உறவுகளுடன் சந்தித்துக் கலந்துரையாடியதன் பயனாக நெடுந தீவைச் சேர்ந்த நண்பர் ஒருவரே இவ்வாறான உதவியைப் புரிந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

விந்தன் கனகரததினம் இந்த உதவி நிதியை நெடுந்தீவு அரச வைத்தியசாலை, அனலைதீவு, நயினாதீவு மற்றும் புங்குடுதீவு அரச வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைப்புக்களுடன் இணைந்து பகிர்ந்தளிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

# ஜெகோவாவின் சாட்சிகள் மாநாடு

ஜெகோவாவின் சாட்சிகள் மாநாடு எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் காலை 9.20 தொடக்கம் மாலை 4.55 மணி வரையும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.20 இல் இருந்து மாலை 3.50 வரையும் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் அனைத்து மக்களும் கல்ந்து கொண்டு பயன்பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு நிரந்தர தொழில் வாய்ப்பு ஏற்பட வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு




வறுமைக்கோட்டின் கீழ் வாழும் எமது மக்களுக்கு தொடர்ச்சியாக வாழ்வாதார உதவி கள் வழங்கப்பட்ட போதும் நிரந்தர வருமானம் பெறும் வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை என ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழில் உற்பத்திக்கான உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றத்தின் பின்னர் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் பல வகையான வாழ்வாதார உதவித் திட்டங்களை மக்களுக்கு வழங்கியுள்ளன. ஆனால், அந்த திட்டங்களின் மூலம் இன்றுவரை மக்களுக்கு நிரந்தர வருமானத்தைப் பெறும் வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ள போதிலும் மக்களின் உழைக்கும் ஆற்றல் அற்றுப்போனதும் இதற்கு மூலகாரணமாகவும், முதற் காரணமாகவும் அமைந்துள்ளது. இது யாழ்.மாவட்டத்திற்கு மட்டும் விதிவிலக்கல்ல.

ஏனெனில், யாழ்.மாவட்டத்தில் இன்றும் சுமார் 60 விகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் வறுமைக்கோட்டுக்குட்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காகவே நாம் வாழ்வாதாரத் திட்டங்களுக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

வன்னி மாவட்டங்கள் உட்பட மீள்குடியேற்றங்கள் நடைபெற்ற பகுதிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளும் உட்கட்டுமான அபிவிருத்தியில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் பாரிய முன்னேற்றங்கள் எவையும் ஏற்படவில்லை.

ஆனால், அதற்கான செயற்றிட்டங்கள் இன்று சரியான பொறிமுறைகளுக்கூடாக பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலமாக நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன. எனவே, எதிர்காலத்தில் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டை நோக்கியதாகவே எமது அபிவிருத்திப் பயணம் தொடரவுள்ளது. என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கௌரவ எதிர்க்கட்சித்தலைவர் பாலகிருஸ்ணன்(ஜீவன்) சண்டிலிப்பாய் பிரதேசசபையின் எதிர்கட்சித்தலைவர் அன்ரன்ஜோன்சன் (ஜீவா) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வாழ்க வளமுடன்

பெயர் :எஸ்.பாவலன்
முகவரி: 5 ஆம் வட்டாரம்
கொழும்புத்துறை
அகவை
6 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்



பெயர் :ச.கவின்ஷா
முகவரி: 7 ஆம் வட்டாரம்
நயினாதீவு
அகவை
1 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

# கடும் வறட்சியான காலநிலை நெடுங்கேணியில் குடிநீருக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி பிரதேசத்தில் தொடரும் வறட்சி காரண மாக குளங்களில் நீர் மட்டம் முற்றுமுழுதாக குறைவடைந்த காரணத்தினால் கிணறுகளின் நீர் மட்டமும் குறைவடைந்தமையால் இப்பிரதேசத்தில் குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நெடுங்கேணி, ஒலுமடு சேவைப்பிலவு பட்டிக்குடியிருப்பு கற்குளம், மருதோடை, குளவிசுட்டான், மாறாவிலுப்பை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில தொடர்ச்சியான வறட்சி காரணமாக இப்பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட விவசாய பயிர்ச் செய்கை முற்று முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதிகளில் கால்நடைகளும் குடிநீர், புல் இல்லாத நிலையில் இறக்கின்றன.

நெடுங்கேணியில் குடிநீர் விநியோகம் முக்னெடுக்கப் படுகின்ற போதிலும் அது கிராம மக்களுக்கு உரிய முறையில் விநியோகிக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கும் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இப்பிரதேச மக்களுக்கான குடிநீர் விநியோகத்தினை மிக விரைவில் பெற்றுத் தரும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்

(40)

# வாட்டுகிறது வறட்சி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊரி, தோப்புக்காடு, மருதபுரம் போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டினால் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாக் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேச மக்களுக்கு காரைநகர் பிரதேசசபை காரைநகர் அபிவிருத்திச் சபை என்பன பௌசர் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இது தமது பாவனைக்குப் பற்றாக்குறையாகவுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



பருவப் பெயர்ச்சி மழை இன்மையால் கிணறுகள் யாவும் வற்றிவிட்ட நிலையில் குளிப்பதற்கும் மற்றும் வீட்டுப் பாவனைக்கும் தண்ணீர் தேடி நீண்ட தூரம் அலைய வேண்டியுள்ளதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (10)

# பொருளாதாரத் தடைகளுக்கு ரஷ்யா வழங்கியது தக்க பதிலடி

ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளுக்கு அந்நாடு பதிலடி கொடுத்துள்ளது. பொருளாதார மேம்பாட்டிற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணையும் முடிவை உக்ரைன் எடுத்தபோது, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அதனை நிராகரித்தார்.

இந்நிலையில் உக்ரைனின் மேலும் சில பகுதிகளையும் ரஷ்யாவுடன் இணைக்க ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். இதனை ரஷ்யா ஆதரிப்பதாக கூறி அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் அந்நாட்டின் மீது பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

உக்ரைனில் நிலவும் நெருக்கடிக்கு காரணகர்த்தா ரஷ்யா என்பதை வெகுவாக விமர்சித்த கம்யூனிஸ்ட் நாடுகளில் போலந்தும் ஒன்றாகும். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக போலந்திலிருந்து இறக்குமதியாகும் காய்கறி, பழங்களுக்கு ரஷ்யா முற்றிலுமாக தடை விதித்துள்ளது. இந்த இறக்குமதியில் ஏராளமான பூச்சிக்கொல்லி மிச்சங்களும், நைட்ரேட் இரசாயனங்களும் கலந்துள்ளது என்று ரஷ்யாவின் உணவு சுகாதார அதிகாரிகள் தடை விதித்தபோது குறிப்பிட்டுள்ளனர்.

போலந்தில் விளையும் அப்பிள்களுக்கு ரஷ்யாவே பிரதான ஏற்றுமதி சந்தையாகும். ஆண்டுதோறும் ஒரு பில்லியன்



யூரோ வரையிலான அந்நியச் செலாவணியை போலந்திற்கு இந்த வர்த்தகம் பெற்றுத் தந்தது. இந்தத் தடை உத்தரவினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6 சதவிகிதம் பாதிக்கப்படக்கூடும் என்று போலந்தின் துணைப் பிரதமர் ஜனுஸ் பிசோசின்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# தொழிற்சாலையில் விபத்து சீனாவில் 68 பேர் பலி



சீனாவில் உள்ள ஒரு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 68 பேர் கொல்லப்பட்டனர் என சீன அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சீனாவின் கிழக்குப் பகுதி மாகாணமான ஜியாங்சுவில் உள்ள குன்ஷான் நகரில் ஏற்பட்ட இந்த விபத்தில் 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

தொழிற்சாலைக்கு வெளியில் காயமடைந்த தொழிலாளர்கள் அமர்ந்திருக்கும் காட்சிகளும் தொழிற்சாலை புகைமூட்டத்துடன் இருக்கும் காட்சிகளும் தற்போது வெளிவந்துள்ளன. மீட்புப் பணிகள் நடந்துவரும் நிலையில், இந்த விபத்து குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர்.

ஜோங்ரோங்என்ற நிறுவனத்திற்கு இந்த தொழிற்சாலை சொந்தமானது என சீனாவின் தேசிய தொலைக்காட்சியான சி.சி.டி.வி தெரிவித்துள்ளது.

# தென்கொரியாவில் கடும் புயல் 200 விமானங்கள் தரையிறக்கம்



(சியோல்)

தென்கொரியாவின் தெற்கு பிராந்தியங்களில் நேற்று கடுமையான புயல் தாக்கியது. மணிக்கு 90 கி.மீ. வேகத்தில் காற்று வீசுவதால் வீடுகளின் கூரைகள், ஜன்னல் கதவுகள் கடுமையாக சேதமடைந்தன. போக்குவரத்து சிக்னல்கள் உடைந்து விழுந்தன. தெருக்களில் மரங்கள் வேருடன் சாய்ந்தன. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

ஜேஜு தீவில் புயலுடன் கனமழையும் பெய்து வருகிறது. இதனால் அங்கிருந்து இயக்கப்படும் 200இற்கும் மேற்பட்ட விமானங்கள் நிறுத்தப்பட்டன. அனைத்து கடற்கரைகளிலும் பொதுமக்கள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயல் வடக்கு நோக்கி நகர்ந்து வருவதால் சியோல் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளில் அடுத்த வாரத் தொடக்கத்தில் சூறைக் காற்றுடன் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை மைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# இலங்கையுடனான உறவை இந்திய அரசு பரிசீலிக்கவேண்டும்

## விஜயகாந்த் வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கையுடனான தற்போதைய உறவைஇந்திய மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும், என தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார். அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கை பாதுகாப்புத் துறையின் இணைய தளத்தில், தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பாக, பிரதமருக்கு தமிழக முதல்வர் எழுதிய கடிதங்களை வைத்து, ஜெயலலிதாவை இழிவுப்படுத்தும் வகையில் கட்டுரை வெளியாகி இருந்தது., பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதல்வர் என்ற வகையில், ஜெயலலிதா கடிதம் எழுதுகிறார். அதை கொச்சைப் படுத்தும் வகையில், கட்டுரை வெளியிட்டது தவறு.

முதல்வரை மட்டுமல்ல் பிரதமரையும், இது இழிவுப்படுத்தியுள்ளது. இதுபோன்ற விஷமத்




தனமான, தரம் தாழ்ந்த விமர்சனங்களைக் கண்டு, தமிழக மக்கள் கொந்தளித்துள்ளனர். இது போன்ற செயல்களில், இலங்கை அரசு வரும் காலத்தில் ஈடுபடக் கூடாது என, மத்திய அரசு அறிவுறுத்த வேண்டும். இந்த மாதிரியான காரியங்களில், இலங்கை உடனான தற்போதைய உறவை, மத்திய அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

# லண்டன் சிசுக்களுக்கு போதைத் தாக்கம்

## ஆய்வில் தகவல்

(லண்டன்)



கருவுற்றிருக்கும் தாய்மார்களின் போதைப் பழக்கம் வயிற்றில் வளரும் சிசுக்களையும் தாக்கிய நிலையில் இங்கிலாந்தில் பிறக்கும் குழந்தைகளில் நாள்தோறும் 4 குழந்தைகளாவது போதைக்கு அடிமையான நிலையில் பிறப்பதாக சமீபத்தில் வெளியான ஆய்வுக் குறிப்பு தெரிவிக்கின்றது.

ஆண்டுதோறும் சுமார் 1500 பிறந்த குழந்தைகளிடையே இந்தத் தாக்கம் காணப்படுவதாகவும், கருவுற்ற நிலையில் இந்தக் குழந்தைகளின் தாய்மார் ஹெராயின், கொக்கையன் போன்ற கொடிய போதைப் பழக்கத்துக்கு ஆளாகியிருந்ததால், எந்தப் பாவமும் அறியாத அப்பாவி குழந்தைகளின் இரத்தத்திலும் இந்த போதைப் பழக்கம் பரவி விடுவதாகவும் தெரிய வந்துள்ளது.

பெண்களின் கொடிய போதைப் பழக்கம் அவர்களை மட்டுமன்றி, அவர்களின் வயிற்றில் வளரும் குழந்தைகள், குடும்பம், உறவினர்கள் மற்றும் அவர்களை சார்ந்திருக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்தையே பாழக்கி விடுவதாக அந்த ஆய்வுக் குறிப்பு கவலை தெரிவித்துள்ளது.

# பாலைவனத்தின் நடுவே தோன்றியது திடீர் ஏரி

## துனிஷியாவில் அதிசயம்

(லண்டன்)



துனிஷியாவில் பாலைவனத்தின் நடுவே திடீரென தோன்றிய ஏரியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனை காண சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். துனிஷியா வறண்ட பாலைவனத்தில் அமைந்துள்ள ஆபிரிக்க நாடாகும் இங்கு பாலைவனத்தின் மத்தியில் திடீரென மணல் சரிந்து பெரிய பள்ளம் தோன்றி அதில் நீரூற்று ஏற்பட்டது. சில நாட்களிலேயே அது பல ஹெக்ரேர் பரப்பில் ஏரியாக மாறி விட்டது. பாலைவனப் பகுதியில் திடீரென ஒரு ஏரி உருவானமை, விஞ்ஞானிகளை ஆச்சரியப்பட வைத்துளளது. காப்சா பீச் என்று அழைக்கப்படும் பகுதியில் இந்த திடீர் ஏரியை காண பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகளும், நிபுணர்களும் குவிந்து வருகின்றனர். இவ்வாறு திடீர் ஏரி தோன்றுவதற்கான காரணங்கள் குறித்து விஞ்ஞானிகள் எதுவும் தெரிவிக்கவில்லை. உள்ளூர் மக்கள் இதை மிகப் பெரிய அதிசயமாக விமர்சிக்கின்றனர். சிலர் இது தெய்வத்தின் சாபம் என்று பேசத் தொடங்கி விட்டனர். இந்த ஏரியில் மக்கள் அவசரப்பட்டு குளிக்க கூடாது என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நீரூற்று தோன்றிய நாளில் அது ஊதா நிறத்தில் இருந்தது. ஓரிரு நாளில் தண்ணீர் பச்சை நிறத்திற்கு மாறி விட்டது. இந்தத் தண்ணீரில் குறைந்த கதிர்வீச்சு தன்மை இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. எனவே இந்த ஏரியில் குளித்தால் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# காஸாவில் தொடரும் தாக்குதல் இதுவரை 1650 பேர் உயிரிழப்பு

காஸா பகுதியில் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் ரொக்கெட்கள் மற்றும் ஏவுகணைகளை வீசித் தாக்கி வருகின்றனர்.

இந்தப் போரை நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. ரமழான் பண்டிகையை முன்னிட்டு தற்காலிகமாக தாக்குதல் நிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் போர் தொடங்கியது.

இந்நிலையில், காஸா பகுதி மீது நேற்றும் இஸ்ரேலின் டாங்கி படைகளும், போர் விமானங்களும் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலையும் சேர்த்து காஸா பகுதியில் இதுவரை 1650 பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளதாகவும். இவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட அப்பாவி பொதுமக்கள் எனவும் சர்வதேச போர் கண்காணிப் பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தவிர, சுமார் 9 ஆயிரம் பலஸ்தீனியர்கள் காயமடைந்து போதிய மருத்துவ சிகிச்சைக்கும் வழியின்றி அவதிப்படுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

# வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை




வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் ஆளணி பற்றாக்குறை காரணமாக தமது கடமைகளை சரிவர செய்ய முடியாது அலுவலர்கள் திண்டாடி வருகின்றனர். அலுவலகத்தில் பல வெற்றிடங்கள் காணப்பட்டபோதும் அதனை நிரப்புவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால் தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அதிக வேலைப்பளுவால் மன உளைச்சலுக்குள் தள்ளப்படுவதாக அறியப்படுகின்றது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் 25 உத்தியோகத்தர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை 11 உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளுவதனால் அலுவலகத்தின் சேவைகளை திருப்திகரமாக வழங்க முடியாது அலுவலர்கள் திண்டாடுவதுடன் பல சிரமங்களை எதிர்கொள்ளுகின்றனர். அலுவலர்கள் தொடர்ச்சியாக 32 மணித்தியாலங்கள் கடமை ஆற்றுவதோடு, அடுத்த நாள் கடமைக்கும் சமூகம் அளிக்க வேண்டியுள்ளது. இதனால் மன அசதியுடன், மன உளைச்சல் ஏற்படுகின்றது. இதன் காரணமாகச் சிறந்த சேவையினை வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியாது அலுவலர்கள் திண்டாடி வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது ஒரு அலுவலர் பல கடமைகளைச் செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகின்றது. வேலைகள் அதிகமாகக் காணப்படுவதுடன், அதனைச் சீரான முறையில் செய்வதற்கு ஆளணிப் பற்றாக்குறை காரணமாக அமைகின்றது.

அலுவலகத்தில் கடமை புரியும் பெண் அலுவலர்கள் அதிகாலை 5.00 மணிக்கு கடமைக்குச் சென்று இரவு 8.00 மணிக்கு கடமைகளை முடித்துச் செல்வதனால் போக்குவரத்து முதலான பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அலுவலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவை எடுத்துக் கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கைக்ளையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இனியாவது காலம் தாழ்த்தாது ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்தி. செய்யப்பட வேண்டும் எனவும், எனவே உரிய அதிகாரிகள் இனியாவது நடவடிக்கை எடுப்பார்களா என கவலை வெளியிட்டுள்ளனர். (70)

# கிணறுகளில் ஒயில் கலப்பா? பரிசோதனைக்கு நீர் எடுப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் மின்சார நிலையத்தை அண்டிய பகுதிகளிலுள்ள கிணறுகளில், 15 கிணறுகளின் நீரைப் பரிசோதனை செய்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை எடுத்துள்ளதாக, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலக அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து வெளியேற்றப் படும் கழிவுகளால், அதன்னைச் சூழவுள்ள கிணறுகளின் நீர் மாசடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால், அந்நீரை மக்கள் பாவனை செய்ய முடியாத நிலையில் இருக்கின்றது. இது தொடர்பில் அப்பகுதி மக்கள் வலி. தெற்குப் பிரதேசசபை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றுக்குத் தெரியப்படுத்தினர்.

இந்நிலையில், வலி. தெற்குப் பிர்தேச சபை, சுகாதார வைத்தியதிகர்ரி ஆகியோர், அப்பிரதேசத்திலுள்ள கிணறுகளின் நீரின் தன்மையை உறுதிப்படுத்தித்தரும்படி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கமைய மேற்படி கிணறுகளின் நீர் பரிசோதனைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சுன்னாகம் மின்சார நிலையத்தை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் குடிநீர்த் தேவைக்காக வலி.தெற்குப் பிரதேச சபையால், நாளாந்தம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மருமகள் மீது துஷ்பிரயோக முயற்சி மாமனார் விளக்க மறியலில்

மருமகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட மாமனாரை யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி விளக்க மறியலில் வைத்துள்ளார்.

சென்மேரீஸ் வீதி, கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய மாமனார் கர்ப்பவதியான தனது மருமகளை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டுள்ளார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இசை நிகழ்வு ஒன்று நடாத்தப்பட்டது. அந்நிகழ்விற்கு வீட்டில் இருந்தவர்கள் சென்றுள்ளனர். அப்போது தனியாக வீட்டில் இருந்த போது, மருமகளை மாமனார் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் யாழ். சிறுவர், பெண்கள் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்ததை தொடர்ந்து, நேற்று யாழ்.பொலிஸாரினால் மாமனார் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தியபோது, குறித்த நபரை 14 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (25)

## இனந்தெரியாதோர்...

இலக்கானார். முகமூடி அணிந்த ஒரு நபர் தனது வாயைப் பொத்திப் பிடித்திருக்க, மற்றுமொரு முகமூடி அணிந்த நபர் தன்னைத் தடியொன்றினால் பலமாகத் தலையில் அடித்ததாகவும் தான் மயங்கி விழுந்துவிட்டதாகவும் காயமடைந்த மாணவன் தெரிவித்துள்ளார்.

மயக்கம் தெளிந்தபோது விடுதிக்கு வெளியே பற்றை யொன்றில் தான் வீசப்பட்டு கிடந்ததாகவும் கழுத்தில் கயிறு ஒன்று இறுக்கியிருந்ததனால் கழுத்திலும் அடிபட்ட தலையிலும் வேதனை இருந்ததாகவும், அந்த வேதனையோடு விடுதிக்குச் சென்ற போது சக மாணவர்கள் தன்னை வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காயமடைந்த மாணவர் பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவரின் உடம்பில் பெருமளவில் கீறல் காயங்களும் உள்ளன.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடத்தில் கல்வி பயிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கொச்சைத் தமிழில் கொலை அச்சுறுத்தல் விடுத்து கடந்த மாதம் 20 ஆம் திகதி மாணவர்களின் விடுதிக் கழிப்பறையொன்றில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகவும், இதனையடுத்து அதேபோன்ற சுவரொட்டிகள் நேற்றைய தினம் மீண்டும் ஒட்டப்பட்டிருந்ததாகவும், அந்த கழிப்பறையிலேயே முகமூடி நபர்களினால் மாணவன் சுதர்சன் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு பல்கலைக்கழக நிர்வாகமும், பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (37)

## மாணவனை...

தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எம்முடன் கூடப் படித்த சக மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். ஆனால் அவரைப் பார்வையிட எமக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இருவர் சென்று பார்வையிட்டு வந்த பின்னர் ஏனைய இருவர் செல்ல வேண்டுமெனப் பல்கலைக்கழக நிர்வாகம் தெரி வித்துள்ளது. இதன்படி நேற்றைய தினம் இருவர் சென்றவேளை அவரை 'எக்ஸ்றே' எடுப்பதற்கும் 'ஸ்கானிங்' செய்வதற்குமெனக் கொண்டு சென்றனர். இதனால் அவரைப் பார்க்க முடியாது போனதுடன், அவரது நிலை என்ன என்ப்து தொடர்பாகவும் அறிய முடியாமற் போனது.

எனவே இப்படியான ஒரு நிலை எமக்கும் வந்தால் இவ்வாறான கட்டுப்பாடுகளே விதிக்கப்படும். ஆகவே எம் அனைவரையும் மாணவனைப் பார்க்க அனுமதிக்க வேண்டும். இல்லையெனில் மாணவனை பல்கலைக்கழகத்திற்கு கூட்டி வந்து நாம் பார்வையிடச் செய்ய வேண்டும். இல்லையெனில் இன்றைய தினம் நடைபெறவுள்ள பரீட்சையினை புறக்கணிக்கவுள்ளதாக தமிழ் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (37)

## மக்களின்....

தெரிவிக்கையில், ஆலயமொன்றில் நடைமுறையில் உள்ள விதிகளைப் பின் பற்ற வேண்டியது அனைவரதும் கடமையாகும். இவ்வாறு அந்த விதியைப் பின்பற்றாமல் நடப்பது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத தன்மை என்பதுடன், ஆலய புனிதத் தன்மைக்கும் பங்கம் விளைவிப்பதாக அமையும்.

எனவே இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் கேள்வியெழுப்புவேனென அவர் மேலும் தெரிவித்தார்.

## நட்வர்சிங்கின்...

படையினரை அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கம் கோரிய காலப் பகுதியில் இருந்து, அவர்கள் இந்தியாவில் இருந்து அனுப்பி வைக்கப்படும் காலப்பகுதி வரையிலான கால இடைவெளியில் இது குறித்து பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பல்கலை...

நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன. எனினும், தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் அனைத்து இலங்கை மக்களினதும் ஐக்கியத்துக்காக பாடுபடும் எமது முயற்சிகளை கேள்விக்குட்படுத்தும். எனவே இவ்வாறான தாக்குதல் சம்பவங்களை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க விஷேட செயற்திட்டத்தினைத் தயாரித்து ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளேன்.

மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக உடனடியாக செயற்படுகின்றபோதே பாதுகாப்பான சூழலில் எமது மாணவச் செல்வங்கள் தமது கல்வியைத் தொடர முடியும். தூரப் பகுதிகளிலிருந்து உயர் கல்வியைத் தொடர்வதற்காக பல்கலைக் கழகங்களுக்கு பிள்ளைகளை அனுப்பி வைக்கும் பெற்றோர் இவ்வாறான தாக்குதல்களால் மிகுந்த வேதனையும், பதற்ற மும் அடைந்துள்ளனர்.

எனவே, பல்கலைக் கழகங்களுக்குள் நடைபெறும் இவ்வாறான அநாகரிகமான தாக்குதல்கள் மாணவர்களின் கல்வியையும், இனங்களுக்கிடையேயான ஐக்கியத்தையும் பாதிக்கச் செய்து விடும். எனவே சப்ரகமுவ பல்கலையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்படுவதோடு உரிய தண்டனைய்யையும் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து வெளி இடங்களில் இருந்து வருகை தந்து கல்வி பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பாதுகாப்புத் தொடர்பான அச்சத்தை அகற்றவேண்டும் எனும் கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## ஆலய நடைமுறைகளை...

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் கலாசார உடை அணிந்து வரவேண்டும் என்பதுடன் இந்து ஒழுக்கநெறிகளை யும் கடைப் பிடிக்கவேண்டும் என்று யாழ். மாநகரசபை அறிவித்திருந்தது. எனினும், மிருக பலியை நிறுத்துவதற்காக குரல்கொடுத்துவரும் அமைச்சர் ஆலய புனிதத்தை சீர்குலைக்கும் வகையில் வழிபாடியற்றிச் சென்றுள்ளமையானது இந்துக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (25)

## சர்வதேச....

விடுவார்கள்.இந்த ஆணைக் குழுவின் உண்மையான நோக்கம் என்ன? உண்மையைக் கண்டுபிடித்து நல்லிணக்கத்தை உருவாக்குவது. அவர்களுக்கு வேறு அரசியல் நோக்கம் கிடையாது. அவ்ர்கள் சர்வதேச ரீதியாக உயர் தராதரத்தைப் பேணும் நிபுணர்கள். சர்வதேச கொள்கைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு ஏற்ப பணியாற்றுபவர்கள். அவர்கள் இலங்கை அரசாங்கத் திற்கோ அல்லது புலம்பெயர் ந்த தமிழர்களுக்கோ நன்மை கிடைக்க வேண்டும் என்பதற் காக பணியாற்றவில்லை. அவர்கள் சுயாதீனமாகப் பணியாற்றுவார்கள். ஆகவே ஒரு போட்டி இருக்க முடியாது. அரசாங்கம் இதனை ஒரு போட்டியாக மாற்ற முயன்றால் எப்படியும் நாங்களே தோல்வி அடைவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா...

ணைக்குழுவை நியமித்துள்ளது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நீக்கப்பட்டமை மற்றும் அவரது விலகலோடு இராணுவத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

இதனால் உருவாகிய நிலைமைகளினால் ஏற்பட்ட வெறுப்புணர்ச்சி காரணமாக பல சிரேஷ்ட அதிகாரிகள் இராணுவத்தில் இருந்து விலகியதுடன் நாட்டை விட்டும் வெளியேறினர்.

இவர்களே சர்வதேச விசாரணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க உள்ளனர். எவ்வாறான அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் சர்வதேச விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தயாராக இருப்பதாகவும் ஜெஹான் பெரேரா மேலும் கூறியுள்ளார்.

# சர்வதேச சட்டங்கள் குறித்தே நிபுணர்குழுவிடம் ஆலோசனை

## மக்ஸ்வெல் பரணகம தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் தொடர்பாக மாத்திரமே சர்வதேச நிபுணர் குழுவிடம் ஆலோசனைகளை பெறுவோம். இவ்வாறு காணாமற் போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

எமது ஆணைக்குழுவுக்கு இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாக மாத்திரமே ஆலோசனை பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நாங்கள் சர்வதேச சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் தொடர்பாக மாத்திரமே சர்வதேச நிபுணர் குழுவிடம் ஆலோசனைகளை பெறுவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். எமது ஆணைக்குழுவின் சுயாதீன தன்மைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது, ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ எமக்கு உரிமையுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை பொலிஸாருக்கு பயிற்சிகள் தொடரும்

## ஸ்கொட்லாந்து தெரிவிப்பு

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் விவகாரம் தொடர்பில் எதிர்ப்புக்கள் தோன்றியுள்ள போதும், இலங்கை பாதுகாப்பு படையினருக்கு ஸ்கொட்லாந்து நாட்டின் பொலிஸாரினால் வழங்கப்படும் பயிற்சித்திட்டம் 2015 வரை தொடரும் என்று ஸ்கொட்லாந்து பொலிஸ் உறுதியளித்துள்ளது.

2007 ஆம் ஆண்டிலிருந்து கடந்த வருடம் வரை சுமார் 3,500 இலங்கை பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சில சிரேஷ்ட தளபதிகள் ஸ்கொட்லாந்து பொலிஸ் கல்லூரியில் பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர்.

சர்வதேச பொலிஸ் பயிற்சியின் தரம் என்ற குறிக்கோளின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு வெளிநாட்டு அலுவலகங்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.

இத்திட்டமானது சிரேஷ்ட அதிகாரிகளுக்கு ஒரு புதிய தலைமைத்துவ கொள்கையினை முன்னேற்றமடையச் செய்யும் என்று ஸ்கொட்லாந்து பொலிஸ் கல்லூரியின் முன்னாள் கல்வி மற்றும் மேம்பாட்டு தலைவர் புரூஸ் மிலின் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுநலவாய விளையாட்டுக்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முக்கியமான தலைமைத்துவ பங்கினை வகிப்பது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# காணாமற்போன குடும்பஸ்தர் யாழ்ப்பாண சிறைச்சாலையில்

(கரணவாய்)

காணாமற்போனதாக தெரிவிக்கப்படும் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த குடும்பஸ்தர் யாழ்ப்பாண சிறைச்சாலையில் உள்ளதாக குடும்பத்தாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்ட இவர் இரண்டு தினங்கள் கழித்து கிளிநொச்சியிலிருந்து தொடர்பு கொண்ட பின்னர் அவரிடமிருந்து எவ்வித தொடர்புமில்லையென மனைவி பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த நபரும் மேலும் இருவரும் வலம்புரிச் சங்கொன்றை யாழில் விற்பனை செய்யும் நோக்குடன் கொண்டு வந்தவேளை சாவகச்சேரிப் பொலிஸார் இவர்களை கைது செய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களே யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். குறித்த நபர் தடுத்துவைக்கப்பட்டமை தொடர்பில் மனைவிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (18)

# பௌத்த மதத்தை அழிக்க முயற்சி செய்கிறது அரசு

## அஸ்கிரி பீடாதிபதி குற்றச்சாட்டு

பௌத்த மதத்தை அழிக்க அரசாங்கம் முயற்சிப்பதாக கண்டி அஸ்கிரி பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாத்தளையில் நேற்று நடைபெற்ற 119 ஆம் தேசிய தஹாம் பாடசாலை நாள் நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசனத்தை இல்லாதொழிக்கும் சூழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டின் பிரதமர் என்ற ரீதியில் நீங்கள் இதனை அறியாமல் இருக்க வாய்ப்பில்லை.

எதிர்கால தேர்தல் காரணமாக பௌத்த சாசன பாதுகாப்பு சட்டத்தை கூட கிடப்பில் போட முயற்சிக்கப்படுவதாக நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

விகாரை பூமியில் அரசாங்கத்தின் செலவில் ஏதேனும் நிர்மாணிக்கப்பட்டால் அதன் சட்ட பூர்வ உரிமை அரசாங்கத்தைச் சாரும் என மத்திய மாகாண விகாரைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரதமர் கருத்து வெளியிட வேண்டுமென உடுகம ஸ்ரீபுத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதமர் டி.எம் ஜயரட்னவும் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய அதிகாரியை மீள அழைத்தது பாகிஸ்தான்



சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய அதிகாரி இரகசியமான முறையில் மீள அழைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் இந்தியாவின் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க கன்சோல் காரியாலங்கள் மீது தாக்குதல் நடாத்த திட்டமிட்டதாக குறித்த அதிகாரி மீது இந்தியா குற்றம் சுமத்தியிருந்தது.

குறித்த அதிகாரி இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததனைத் தொடர்ந்து, இரகசியமாக குறித்த அதிகாரியை பாகிஸ்தான் மீள அழைத்துக் கொண்டுள்ளது.

அமீர் சுபைர் சித்திக்கீ என்ற அதிகாரியே இவ்வாறு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் 2010 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய இந்த அதிகாரி பற்றிய தகவல்களை வழங்குமாறு இந்தியா கோரிக்கை விடுப்பதற்கு முன்னதாகவே, பாகிஸ்தான் அதிகாரியை மீள நாட்டுக்கு அழைத்துக் கொண்டுள்ளது.

இலங்கைப் பிரஜைகளைக் கொண்டு தென் இந்தியாவின் சில இடங்களில் உளவு பார்த்து தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மே மாதம் சென்னை ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கண்டியைச் சேர்ந்த சஹீட் ஹுசெய்ன் என்பவரை இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் சித்திக்கீ என்ற அதிகாரி கடமையாற்றி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மலேசியாவில் வைத்து மற்றுமொரு இலங்கையர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா நெளுக்குளத்தில் கடை உடைத்து கொள்ளை

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் சந்தியில் அமைந்துள்ள கடையொன்றில் திருடர்கள் கொள்ளையிட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த கடையின் உரிமையாளர் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் கடையை பூட்டிவிட்டு நேற்று கடைக்கு வரும் போதே கடை கொள்ளையிட்ட சம்பவம் தெரியவந்துள்ளது. கடையிலிருந்த மடிக்கணனி மற்றும் கைத்தொலைபேசி உட்பட 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணம் கொள்ளையிடப்பட்டதாக கடை உரிமையாளர் தெரிவித்தார். மேலதிக விசாரணையை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (70)

# வவுனியா ஊடகவியலாளருக்கு தொலைபேசி அச்சுறுத்தல்



வவுனியா மாவட்ட ஊடகவியலாளரும் வன்னி பத்திரிகையாளர் சங்கத்தின் உப தலைவருமான நவரத்தினம் கபிலநாத்துக்கு நேற்று இரவு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வவுனியா பொலிஸில் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பணியாற்றிவரும் ஊடகவியலாளரான நவரத்தினம் கபிலநாத்துக்கு இரவு இரு தொலைபேசி இலக்கங்களில் இருந்து இவ்வாறான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் இதன் போது குறித்த ஊடகவியலாளர் தான் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்வதாக தெரிவித்த போது, தம்மை யார் என தெரியாது பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு இருப்பதற்கு விருப்பமில்லையா என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த ஊடகவியலாளர் வவுனியாவை சேர்ந்த ஏனைய இரு ஊடகவியலாளர்களுடன் வவுனியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (70)

தினமுரசு நாளிதழ் நடாத்தும்

## புதிர்ப்போட்டி

பெரியவர்களுக்கும், சிறியவர்களுக்கும் வெவ்வேறாக
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்
புதிர்ப்போட்டி நடாத்தி வெற்றியாளர்களுக்கு
பரிசு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் சனிக்கிழமையிலிருந்து
இது அமுல்படுத்தப்படும்.

**3 மாதத்திற்கு ஒருமுறை வெற்றியாளர்கள்**
**தேர்ந்தெடுக்கப்பட்டு புகைப்படத்துடன்**
**பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படும்**

(இ)

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.